17 SEP 1996 17 SEP 1996

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆவணி 30 ஞாயிற்றுக்கிழமை (15-09-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 211

## வன்னியிலிருந்து வவுனியா வருவோர் உறவினர் வீடுகளில் தங்கத் தடை!

வன்னிப்பகுதியில் இருந்து வவுனியாவுக்கு இடம் பெயர்ந்து வரும் எவரும் அவர்களுக்கென வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களிலேயே தங்க வேண்டும். வெளியே தங்குவதற்கு அவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். இவ்வாறு வெளியே சென்று தங்குவதற்கு அவசர பொலீஸ் பாஸ் வழங்கப்படமாட்டாது.

மேல்மட்டத்தில் இருந்து கிடைத்த பணிப்புரையை அடுத்து வவுனியா அதிகாரிகள் மேற்கண்ட நடைமுறையை அறிவித்துள்ளனர்.

வவுனியாவில்நலன்புரி நிலையங்களுக்கு வெளியே ஒருவார பாஸுடன் தங்கியுள்ளவர்கள் தமது பாஸைப் புதுப்பிக்க வென வழமைபோல் பிறவுண் கம்பனி பொலீஸ் நிலையம் சென்றபோது பொலீஸார் பாஸைப் புதுப்பிக்க மறுத்து விட்டனர்.

அவர்கள் நலன்புரி நிலையங்களுக்குச் சென்று அங்கிருந்தே தமது சொந்த இடங்களுக்குச் செல்லவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(இ-3)

## கொழும்பு - யாழ்ப்பாணத் தனியார் விமான சேவை

### தினமும் நடைபெற ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 15

இரத்மலானைக்கும் பலாலிக்கும் இடையில் தினமும் தனியார் விமானப் போக்குவரத்து சேவை ஒன்றை ''லயன் எயர்'' நிறுவனத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

தினமும் இந்த சேவை மூலம் 40 பயணிகள் வரை யாழ்ப்பாணம் வரவும்—

அதேயளவு பயணிகள் கொழும்பு செல்லவும்— வசதி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்விமானத்தில் பயணம் செய்ய கொழும்பு, பம்பலப்பிட்டி கற்பகம் கட்டடத்தில் அமைந்துள்ள மேற்படி நிறுவனத்தின் அலுவலகத்தில் தினமும் ஏராளமானவர்கள் கூடுவதாகவும்—

அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரையான காலத்துக்கு சகல ஆசனங்களும் பதிவு செய்யப்பட்டு விட்டதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

விமான மூலம் பயணம் செய்ய விரும்பும் அரச ஊழியர்கள் தமது திணைக்களம் மூலம் விண்ணப்பித்து பாதுகாப்பு அமைச்சு அனுமதி பெறவேண்டும் என்றும் —

பொதுமக்கள் தமக்கு அருகில் உள்ள பொலீஸ் நிலையத்தில் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு அரச அதிபர்களுடன் ஜனாதிபதி நேரில் பேசுவார்!

## அத்தியாவசிய சேவைகளிலுள்ள குறைபாடுகள் விரிவாக ஆராயப்படும்

கொழும்பு; செப்ரெம்பர் 15

வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் உணவு, போக்குவரத்து மற்றும் அத்தியாவசியப் பிரச்சினைகள் தொடர்பாக வடபகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து அரச அதிபர்களுடனும் உயர் மட்ட மாநாடு ஒன்றை நடத்தத் தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி. மற்றும் புளொட் அமைப்புக்களின் தலைவர்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தி வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். அப்பொழுதே ஜனாதிபதி அரச அதிபர்கள் மாநாட்டைக் கூட்டுவதற்கு இணக்கம் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நடந்த இந்தச் சந்திப்பின் போது வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் வாழும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும்—

இப்பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு போதியளவு மருந்துகளையும், உணவுப்பொருள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக சபை ஒன்றை நிறுவும் வரையே ஒருங்கிணைப்பு குழு

### ஈ.பி.டி.பி. - புளொட்டிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, செப். 15

வடக்கு—கிழக்கில் ஓர் அரசியல் தலைமைத்துவத்தை ஏற்படுத்துவதற்கான இடைக்கால நிர்வாகசபை ஏற்படுத்தப்படும் வரை அம்மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிடவும், மேற்பார்வை செய்யவுமே வடக்கு—கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான ஒருங்கிணைப்புக் குழு உருவாக்கப்பட்டுள்ளது.

அதன் உறுப்பினர்களாக அந்த மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களே இடம் பெறுவர்.

மேற் கண்டவாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி—புளொட் ஆகிய அமைப்புக்களின் தலைவர்களுடன் நேற்று முன்தினம் நடந்த பேச்சின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகசபை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று ஈ.பி.டி.பி மற்றும் புளொட் அமைப்புக்கள் வற்புறுத்தி வருவது தெரிந்ததே.

இடைக்கால நிர்வாகசபை அமைப்பதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

(இ-3)

## கூட்டணியினர் தனித்து ஜனாதிபதியைச் சந்திப்பர்

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு தொடர்பாகவும் —

வடக்கு - கிழக்கின் இன்றைய நிலை தொடர்பாகவும் — தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்வரும் 19 ஆம் திகதி ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தவிருப்பதாக கூட்டணி பிரமுகர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

அதே வேளை — வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் எவரும் இதுவரை பேசவில்லை என்றும் அவர் கூறினார்.

(இ-3)

## ஸ்ரீ மகாபோதிக்கு அருகில் தாக்குதல் நடத்த திட்டம்

### லொறி பிடிபட்டதாக தெரிவிப்பு

கொழும்பு, செப். 15

அனுராதபுரத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீமகாபோதி வெள்ளரசு மரத்துக்கு அருகில் தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்காக தயாராக வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றை விசேட பொலீஸ் பிரிவினர் கடந்த வியாழக்கிழமை வவுனியாவில் வைத்து கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்குத் தேவை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதி அமைச்சர் மனைவிக்கு ரூ.10லட்சம் பிணை அனுமதி

கொழும்பு, செப். 15

கொலைக் குற்றச்சாட்டின் பேரில் மரணதண்டனை விதிக்கப்பட்ட மீன்பிடி, நீரியல்வள பிரதி அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோவின் மனைவி 10 லட்சம் ரூபா சொந்தப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேசமயம் இந்த வழக்கில் இரண்டாம் எதிரியான அஜித் பிரியங்காரா பெரேரா 20லட்சம் ரூபா சொந்தப்பிணை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிரனேட்வீச்சு; மூவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 15

யாழ்ப்பாணம் நட்டாதெருச் சந்தியில், நேற்று முன்தினம் இடம் பெற்ற கிரனேட் வீச்சின் போது அதன் சிதறல்களால் மூவர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகாலிங்கம் ரஞ்சன் (வயது 30), நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த செல்லத்துரை விக்கினேஸ்வரன் (வயது 45), சங்கானையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை விக்கினேஸ்வரன் (வயது 45) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை — புலிகளினால் வீசப்பட்ட '' அருள் '' கைக்குண்டுகள் வெடித்து மூவர் காயமடைந்ததாக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

(இ- 3- 15)

## துப்பாக்கிச் சூடு: ஒருவர் பலி

தென்மராட்சி, செப். 15

மாணவர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணம் அடைந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலைப் பொழுதில் சாவகச்சேரி கெருடாவிலில் இடம்பெற்றது.

சரசாலை வடக்கைச் சேர்ந்த சரவணமுத்து சரவணபவான் (வயது 24) என்னும் வெளிவாரி பல்கலைக்கழக கலைப்பிரிவு முதல்நிலை மாணவனே இறந்தவர் ஆவார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு விசாரணையின் பின் உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

(இ-15-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் படித்துக் கொண்டு மொனறாகலையில் பரீட்சை

## மாணவனின் பல்கலை அனுமதி இடை நிறுத்தம்

கொழும்பு, செப். 15

கொழும்பு பாடசாலையில் படித்துக் கொண்டு பின் தங்கிய மொனறாகலை மாவட்டத்தில் ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சை எடுத்துச் சித்தி எய்தி பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர் ஒருவரின் பல்கலைக்கழக அனுமதி உடனடியாக இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

மொனறாகலையில் உள்ள பாடசாலை ஒன்றில் படித்து பின்னர் அங்கு ஜி சீ. ஈ உயர்தரப் பரீட்சை எடுத்ததாக பாடசாலை அதிபரின் கையொப்பத்தை மோசடி செய்து தயாரிக்கப்பட்ட தஸ்தாவேஜுவைச் சமர்ப்பித்து இம் மாணவன் பல்கலைக்கழக அனுமதி பெற்றிருந்தது விசாரணையின் போது கண்டு பிடிக்கப்பட்டது.

இம் மாணவனின் அனுமதியை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இடை நிறுத்தி வைத்துள்ளது. இம் மாணவன் றுகுணு பல்கலைக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞானபீடத்தில் சேர்ந்திருந்தார்.

இது போன்று கொழும்பு பாடசாலைகளில் படித்துக் கொண்டு வேறு மாவட்டங்களில் சோதனை எடுத்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற வேறு ஐந்து மாணவர்கள் பற்றியும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு விசாரணை நடத்திவருகிறது.

பின் தங்கிய மாவட்டங்களில் சோதனை எடுக்கும் மாணவர்கள் தரப்படுத்தல் மூலம் குறைந்த புள்ளிகளுடன் பல்கலைக்கழக அனுமதி பெறும் சலுகை வழங்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

## சிமெந்து இருந்தும் மணல் இல்லை

வீடுகள் திருத்துவோர் சிமெந்துடன் கலப்பதற்குத் தேவையான மணல் இல்லாது சிரமம் அடைகின்றனர்.

வல்விபுரக்கோயில், நாகர்கோயில், அரியாலைப் பகுதியில் மணல் ஏற்றுவதற்கு உரிய வசதிகள் இல்லாததே இதற்குக் காரணம் ஆகும்.

(இ-11)

---

**NEW SCIENCE ACADEMY**
KANNATHIDY, JAFFNA

# 97 A/L
## DAY CLASS & WEEKEND CLASSES

துரித மீட்டல் வினா விடை வகுப்பு

| | |
|---|---|
| Physics | — திரு. சோதிலிங்கம் |
| | — திரு. குமரன் |
| Chemistry | — திரு. மணியம் |
| | — திரு. சிவத்திரன் |
| Pure/ Applied Maths | — திரு. வெக்டர் |
| | — திரு. குணம் |
| Botany | — திரு. குணசீலன் |
| Zoology | — திரு. தம்பிராஜா |
| | — திரு. கெங்காதரன் |

குறிப்பு:- 96 A/L மாணவர்களுக்குப் பூர்த்தியாக்கப்படாத பாடத்திட்டம் பூர்த்தியாக்கப் படும்.

அலகு ரீதியாக மீட்டல் செய்து வினா விடை செய்யப்படும்.

ஆரம்பம்: **18 - 09 - 1996**
Wed. 8-00 A.M.

(42726)

---

# ஹற்றன் நஷனல் வங்கி
# பத்தும் விமன 96
முன்னேற்றத்திற்கான பாதை

பத்தும் விமன 96 அரையாண்டு மாபெரும் சீட்டிழுப்பில் 10 ஆறுதல் பரிசில்களாக பரிசில்கள் ஒவ்வொன்றும் ரூ 50 000 பெறுமதியான வீட்டு உபகரணங்களைப் பெறுவோரில் யாழ். கிளையில் இருந்து வெற்றி பெற்றவர்கள்.

1. செல்வி எஸ். லோகேஸ்வரி
2. திரு. ஆர். திரவியநாதன் ] யாழ் கிளை

பத்தும் விமன 95/96 காலாண்டு சீட்டிழுப்பில் ஒவ்வொன்றும் ரூபா 10, 000 பெறுமதியான பரிசில்களை வென்றவர்கள்

காலாண்டு மார்கழி 1995

1. திரு. இ. சிவஞானசுந்தரம்
2. திரு. செ. திருச்செல்வம்
3. திரு. ம. மகேந்திரராஜா } யாழ். கிளை

காலாண்டு பங்குனி 1996

1. திரு. கோ. பொன்னுச்சாமி
2. திரு. அ. றெயினோல்ட்
3. திரு சே. தர்மராசா } யாழ். கிளை

காலாண்டு ஆனி 1996

1. திரு. ச. வி. முருகேசு
2. திருமதி கோ. புனிதவதி
3. திரு பொ. சிங்கராஜா } யாழ். கிளை

பரிசிழுப்பிற்கு தகைமை பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது இலங்கை ரூபாய் சேமிப்புக்கணக்கினை அல்லது ஏதாவது ஓர் NRFC/RFC வெளிநாட்டு நாணய சேமிப்புக் கணக்கினை கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணைக்கமைய ஓர் குறைந்த பட்ச மிகுதியுடன் பேணுவதாகும்.

கீழ்க் காட்டப்பட்டுள்ள குறைந்த பட்ச மிகுதிகள் குறிப்பிட்ட மாதங்களின் முதலாவது வேலை செய்யும் தினத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும், இல்லாவிடின் வைப்புத் தொகை அடுத்த மாதத்திற்கான வைப்புத் தொகையாக அமைய வேண்டும்.

**மறக்காதீர்கள்!** நீங்கள் செய்ய வேண்டியது உங்களால் ஆரம்பிக்கப்பட்ட எந்தவொரு வைப்பையும் தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பேணுவதாகும்.

### தோல்வியில்லாத ஒரு பரிசிழுப்புத் திட்டம்
### பத்தும் விமன 96இல் இன்னும் வெல்லப்பட உள்ள பரிசுகள்

**ஆண்டு இறுதி மாபெரும் சீட்டிழுப்பு**

இரண்டு புத்தம் புதிய வீடுகள் ஒவ்வொன்றும் ரூ 1. 6 மில்லியன்
ஒரு புத்தம் புதிய கார் ரூ. 750, 000
10 ஆறுதல் பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 50, 000 பெறுமதியான வீட்டு உபகரணங்கள்

**காலாண்டு பரிசிழுப்புகள்**

390 பரிசில்கள் ஒவ்வொன்றும் ரூ. 10, 000 பெறுமதியான வீட்டு உபகரணங்கள் (ஒவ்வொரு கிளையிலும், 3 பரிசில்கள்)

### ஆண்டு இறுதி மாபெரும் பரிசிழுப்பில் தகைமை பெறுவதற்கு வைப்பில் இட வேண்டிய தொகை

| மாதம் | இலங்கை ரூபாய் | அமெரிக்க டொலர் | ஸ்டேர்லின் பவுண்ட் |
|---|---|---|---|
| அக்டோபர் | 16, 000 | 400 | 300 |
| நவம்பர் | 20, 000 | 450 | 350 |
| டிசம்பர் | 25, 000 | 575 | 425 |

மேலும் விவரங்களுக்கு அருகில் உள்ள ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

---

குருபாதம் துணை
ஓம் பிரபன்ன துக்க நிவாரிண்யை நமக.

# தும்பளை நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில்
## விநாயகர் சதுர்த்தி

நிகழும் தாது வருடம் ஆவணி மாதம் 31 ஆம் திகதி திங்கட்கிழமை (1996 - 09 - 16) விநாயகர் சதுர்த்தி விரத தினத்தன்று பிரதம குரு சிவ ஸ்ரீ தியாகசோமாஸ்கந்தராஜாக் குருக்கள் தலைமையில் புதிய முறைப்படி 4- 00 மணிக்கு அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பித்து நடைபெறும். வசந்த மண்டபப் பூசையை அடுத்து செயலாளர் சி. வாமதேவனின் நன்றி உரையைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் வெளி வீதியுலாவும், பிரசாதம் வழங்கலும் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

மந்திர ரூபனை நான் மறவேனே

சோ. புவனேஸ்வரியம்மா
உபயகாரர்

(42722)

---

# போட்டோ பிரதி சேவை

★ சகலவிதமான அளவுகளிலும்
★ சிறிதாக்கல், பெரிதாக்கல் உட்பட போட்டோப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

# “கோல்டன் விங்”

154, நவீன சந்தை (வெளிப்புறம்)
(ராணி சினிமா எதிரில்)
யாழ்ப்பாணம்.

கிளை: R. ராசதுரை
நியூ ஏஜென்ற்,
இருபாலைச் சந்தி, கோப்பாய். (42564)

---

# கண்ணீர் அஞ்சலி

கலியுகத்தில் புதுமையான நிகழ்வு

கட்டப்பிராய் முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பரிபாலகராக இருந்த ஓய்வு பெற்ற ஆசிரியர்

**சிவகுரு கணபதிப்பிள்ளை** அவர்களும்

அன்னாரின் துணைவியாராகிய

**திருமதி நாகம்மா** அவர்களும்

ஒரே நாளில் நேற்று (14 - 09 - 1996) இறைவனடி எய்தி விட்டார்கள். திருமதி கணபதிப்பிள்ளை பூவோடும் பொட்டோடும் காலை 9-30 மணிக்கும் திரு கணபதிப்பிள்ளை அவர்கள் நண்பகல் 12-00 மணிக்கும் அம்பாளின் பாதாரவிந்தங்களோடு இணைந்து விட்டார்கள். நாற்பது வருடங்களுக்கு மேலாக அம்பாளுக்கு மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும் தொண்டுகள் செய்தஆசிரியத் தம்பதிகளாகிய திரு.திருமதி கணபதிப்பிள்ளைதம்பதிகளின் ஆத்மா சாந்தியடைய அகிலாண்டேஸ்வரியாகிய கட்டப்பிராய் முத்துமாரி அம்பாளின் திருப்பாதங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

கட்டப்பிராய் அம்பாள்
ஆலய பரிபாலன சபையும்,
ஆலய பிரதம குருவும்.

(42732)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குவைத்துக்கு மேலும் 5 ஆயிரம் துருப்புகள்

## அமெரிக்கா அவசரமாக அனுப்பியது

பாக்தாத், செப். 15

ஈராக் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா வளைகுடாவுக்கு விமானங்களையும், கடற்படைக் கப்பல்களையும் அனுப்பி உள்ள அதே சமயம் மேலும் 5,000 அமெரிக்கத் துருப்புக்கள் குவைத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

ஈராக் மீதான தாக்குதலுக்கு குவைத்தின் தளங்களைப் பயன்படுத்த குவைத் அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருப்பது குறித்து ஈராக் அரசு ஆத்திரம் அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. துருக்கிய தளங்களைப் பயன்படுத்த அமெரிக்கா விடுத்த வேண்டுகோளை துருக்கிய அரசு ஏற்கனவே நிராகரித்திருந்தது.

இதற்கிடையில் எதிர் இராணுவ நடவடிக்கை எடுப்பதில்லை என்றும் —

விமான கண்காணிப்புப் பகுதியில் பறக்கும் விமானங்களை இனி தாக்கப் போவதில்லை என்றும் ஈராக் ஆளும் புரட்சிச் சபை நேற்று அறிவித்தது.

ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலைத் தவிர்க்கும் நோக்கத்துடன் ரஷ்யா மேற்கொண்ட மத்தியஸ்த முயற்சியைத் தொடர்ந்து ஈராக் மேற்கண்ட அறிவிப்பை விடுத்தது.

கடந்த புதன்கிழமை விமானக் கண்காணிப்புப் பகுதியில் பறந்த இரு அமெரிக்க விமானங்களை நோக்கி ஈராக் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது.

எனினும் அந்த விமானங்கள் தாக்குதலில் இருந்து தப்பி பாதுகாப்பாக தளத்துக்கு திரும்பி விட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

விமான கண்காணிப்புப் பகுதியில் பறக்கும் விமானங்கள் மீது தாக்குதல் நடத்துவதில்லை என்ற ஈராக் அரசாங்கத்தின் முடிவை அரபு நாடுகளும், அமெரிக்காவின் நேச நாடுகளும் வரவேற்றுள்ளன.

எனினும் ஈராக் அதிபர் சதாம்ஹுசெய்னின் உள்நோக்கம் இன்னும் புரியவில்லை என்று அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் தெரிவித்துள்ளார். (இ-3)

# மற்றொரு நாட்டை நம்பி இந்தியா இருக்கமுடியாது

## அமெ. நிலைப்பாடு குறித்துக் கருத்து

**உலக அரங்கில்**

உலகளாவிய அணு சோதனைத்தடை ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திட ஒத்துக் கொள்ளுமேயானால் இந்தியாவின் பாதுகாப்புக்கு பிரான்ஸ் நாடோ அல்லது அமெரிக்காவோ உத்தரவாதம் அளிக்கும் என அமெரிக்கா கருத்துக் கூறியதை இந்தியா வரவேற்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த நாடுகள் தரும் பாதுகாப்பு உத்தரவாதங்களை நம்பி இந்தியா இருந்துவிட முடியாது என பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்த யஷ்வன் சிங் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மேல் எழும் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்காக அமெரிக்கா ஓர் அணு ஆயுத தாக்குதலுக்கு முன்வருமா என்பதனை இந்தியாவினால் நம்ப முடியவில்லை என்றும் அவர் கூறினார்.

''இந்த ஒப்பந்தத்தில் உலக நாடுகள் கையொப்பமிடும் நாள் ஐ. நா. வுக்கும், உலக நாடுகளுக்கும் பரிதாபகரமான நாள். ஆனால் அது இந்தியாவிற்குப் பெருமைக்குரிய நாள்'' என ''ரைம்ஸ் ஒப் இந்தியா'' பத்திரிகை எழுதியுள்ளது. (இ-10)

## உணவுப் பஞ்சம்

வடகொரியாவில் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஏற்பட்ட பெரும் வெள்ளம் காரணமாக 3 இலட்சத்து 73 ஆயிரம் தொன் தானியங்கள் அழிந்துள்ளன. அதன் பின்பு நிலைமை மிகவும் மோசமடைந்துவிட்டது என ஐ நா. நிபுணர்கள் அறிவித்துள்ளனர்.

### உலக அழகிப் போட்டி:

# தீக்குளிக்கப் போவதாக மாதர் சங்கம் பயமுறுத்து

பெங்களூர், செப். 15

உலக அழகிப் போட்டியை பெங்களூரில் நடத்துவதற்கு நடிகர் அமிதாபச்சன் நிறுவனத்துக்கு கடும் எதிர்ப்புத் தோன்றியுள்ளது.

சிற்றின்ப வெறியைத் தூண்டும் உலக அழகிப் போட்டியை பெங்களூரில் நடத்தினால் தீக்குளிப்போம் என்று பெண்கள் சங்கங்கள் போர்க் கொடி உயர்த்தியுள்ளன.

கன்னட சலிவாலி இயக்கம் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தப்போவதாக அறிவித்துள்ளது. (இ-3)

# இஸ்ரேலில் தற்கொலைத் தாக்குதல்: ஹிஸ்புல்லா இயக்கத்தினர் எச்சரிக்கை

பேரூட், செப். 15

லெபனான் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலுக்குப் பதிலடியாக இஸ்ரேலில் தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொள்ளப் போவதாகத் தென். லெபனானில் செயற்படும் ஹிஸ்புல்லா கெரில்லாக் குழு இஸ்ரேலை எச்சரித்துள்ளது.

தென். லெபனானில் மறைவிடங்களில் வாழும் ஹிஸ்புல்லா கெரில்லாக்கள் ஈரானிய அரசின் ஆதரவுடன் செயற்பட்டு வருகின்றன.

இவர்கள் தங்கியுள்ள பகுதிகளில் கடந்த வாரம் இஸ்ரேலிய அரசுக் ஹெலிகள் எரி குண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தியிருந்தன.

இதையடுத்தே அந்த இயக்கம் மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்துள்ளது.

ஏற்கனவே இஸ்ரேலில் நடத்தப்பட்ட பல தற்கொலைத் தாக்குதல்களுக்கு இந்த இயக்கத்தினரே பொறுப்பு எனக் கூறப்பட்டிருந்தது. (இ-3)

# அமெரிக்காவுக்கும் அதன் நேசநாடுகளுக்கும் தொல்லை கொடுத்துவரும் சதாம் ஹுசெய்ன்

## ஒத்த கருத்தை எட்டமுடியாத நிலையில் மேற்கு நாடுகள்

*ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்டு வரும் ஏவுகணைத் தாக்குதலுக்கு வரையறுக்கப்பட்ட ஆதரவே அமெரிக்காவின் நேச நாடுகளிடமிருந்து கிடைத்துள்ளது. அத்துடன் தொல்லையாக இருந்துவரும் சதாம் ஹுசெய்னை என்ன செய்வது என்ற பழைய விவாதமும் மீண்டும் ஆரம்பித்துள்ளது. பி.பி.சி மத்திய கிழக்கு செய்தியாளர் றோஜர் ஹாடியின் ஆங்கிலக் கண்ணோட்டத்தின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.*


ஈராக்கில் தோன்றியுள்ள தற்போதைய நெருக்கடி ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

இந்த வகையில் அமெரிக்காவின் தற்போதைய நடவடிக்கை குர்டிஷ் மக்களைப் பற்றியதே அல்ல என்பதும்— முழுக்க முழுக்க இது சதாம் ஹுசெய்ன் சம்பந்தப்பட்ட விஷயம் என்பதும்— தெளிவு.

அமெரிக்கா தனது தாக்குதலுக்கு ஈராக்கின் வடபுல இலக்குகளை விட தென்புல இலக்குகளை தெரிவு செய்ததன் மூலம் சதாம் ஹுசெய்னின் இராணுவ ஆற்றலின் மீது மேலதிக கட்டுப்பாடுகளைத் திணிக்க விரும்புவது தெரிகிறது.

அதிலும், குழப்பம் மிக்க குர்டிஷ் உள்நாட்டுப் போரில் உறுஞ்சி இழக்கப்படாமல் சதாம் ஹுசெய்னின் இராணுவ ஆற்றலை மேலதிகமாக கட்டுப்படுத்தும் ஒரு முயற்சியே இது எனலாம்.

மேலை நாடுகளுக்கு மிக முக்கியமான கூட்டணி நாடுகளான எண்ணெய் வளம் மிக்க குவைத் மற்றும் சவூதி அரேபியா ஆகியவற்றின் மீது வருங் காலத்தில் சதாம் ஹுசெய்ன் ஏதேனும் இராணுவ நடவடிக்கை எடுக்கக் கருதியிருந்தால், அவருக்கு எச்சரிக்கை விடுவதுபோல் இது முழுக்க முழுக்க சதாம் ஹுசெய்னுடன் சம்பந்தப்பட்டது. இதற்கும் குர்டிஷ் மக்களுக்கும் சம்பந்தம் ஏதும் இல்லை என்று மூத்த அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாகச் சொல்லப்படுகிறது. இது பொருள் பொதிந்த வாசகமாகும். தொல்லைதரும் மற்ற அரசுகளைக் கையாள வேண்டிய போது — அதாவது சீனா, பழைய சோவியத் யூனியன், இன ஒதுக்கல் கொள்கையைக் கடைப்



பிடித்து வந்த அப்போதைய தென் ஆபிரிக்கா — பிரச்சினை ஒரு குறிப்பிட்ட ஆட்சி அல்லது ஒரு குறிப்பிட்ட அரசியல் முறை பற்றியதாகவே இருந்து வந்தது.

ஆனால் ஈராக்கைப் பொறுத்த மட்டில் பிரச்சினை ஒரு தனி மனிதரைச் சுற்றியே உள்ளது.

அப்படி சதாம் ஹுசெய்னே ஒரு பிரச்சினை என்றால் அதற்கான திருப்தி அளிக்கும் ஒரு தீர்வை இதுவரை எவரும் கண்டுபிடிக்கவே இல்லை.

1991 இல் வளைகுடாப் போர் நடந்தபோது அமெரிக்காவின் தலைமையில் அமைந்த நேச நாடுகளின் கூட்டுப்படைகள் ஈராக்கிய தலைவரை ஒழித்துக் கட்டத் தவறியதற்காக பலர் அக் கூட்டுப் படைகளைக் குறை கூறுகிறார்கள்.

ஈராக் கண்ட படுதோல்வியின் காரணமாக இயல்பாகவே சதாம் ஹுசெய்ன் தூக்கியெறியப்படுவார் என அமெரிக்கர்களும் அவர்களின் நேச நாடுகளின் தலைவர்களும் உறுதியாகக் கருதினார்கள்.

அத்துடன் ஐ. நா. வின் அங்கீகாரமும் குவைத்தை விடுவிப்பதற்கே அன்றி ஈராக்கை விடுவிப்பதற்கு அளிக்கப்படவில்லை.

இதனால் வளைகுடாப் பகுதியில் உள்ள ... கேடான நாடுகள் எனத் தான் கருதும் இரு நாடுகளான ஈராக் மற்றும் ஈரான் தொடர்பாக இருவகையில் அடக்கும் கொள்கை என ஒரு கொள்கையை அமெரிக்கா கொண்டு வந்தது.

ஈராக்குக்கு எதிராக கடுமையான தடைகளை அது கடைப்பிடித்துவருகிறது. குர்டிஷ் மக்களுக்காகப் பாதுகாப்பான புகலிடம் அமைப்பதை அது ஆதரிக்கிறது. அதேபோல ஈராக்கின் வடபுலத்திலும் தென்புலத்திலும் செய்யப்பட்ட வான் பரப்புகளை அது கொண்டுவந்தது.

இவையெல்லாம் சதாம் ஹுசெய்னைக் கட்டுப் படுத்துவதற்காகவும் தொல்லை விளைவிப்பதில் அவருக்குள்ள ஆற்றலைக் கட்டுப்படுத்துவதற்காகவும் தீட்டப்பட்ட திட்டத்தின் பகுதிகளேஆகும்.

ஆனால் அவரைக் கட்டுப் படுத்துவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. அடக்கி வைக்கப்பட்ட குண்டு உடைத்து வெளியே வருவதால் விளையக் கூடிய ஆபத்துக்களைச் சந்திக்க அவர் எந்த அளவு தயாராக இருக்கிறார் என்பதற்கு தற்போதைய நெருக்கடி ஓர் உதாரணம் ஆகும்.

ஜோர்தானின் தலைநகரமான அம்மானில் தங்கியிருக்கும் ஈராக்கிய எதிர்க் கட்சிக் குழுக்களுடன் அமெரிக்க உளவு நிறுவனமான சீ.ஐ.ஏ. பல மாதங்களாகச் சேர்ந்து உழைத்து வருகிறது.

இந்த ஈராக்கிய எதிர்க் கட்சிக் குழுக்களில் இருப்பவர்களில் பலர் முன்னாள் ஈராக்கிய உளவுத்துறை அதிகாரிகளாவர். இருப்பினும் சதாம் ஹுசெய்னைப் பதவியிலிருந்து அகற்ற கடந்த காலத்தில் மேற்கொண்ட முயற்சிகளை விட எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பயனளிக்கும் எனக் கூற முடியாது.

ஈராக் பற்றிய விவாதத்தில் பெரும்பகுதி இடர்பாடான ஒரு கேள்வியைச் சுற்றியே அமைகிறது. அது என்னவெனில் சதாம் ஹுசெய்ன் பிடிவாதமாக நகர மறுத்து பதவியில் ஒட்டிக் கொண்டிருந்தால் அவருடன் சக வாழ்வு வாழ முடியுமா? என்பதே அது.

எல்லா விவாதங்களுக்கும் அடி நிலையாகவுள்ள அந்த ஆதார விவகாரம் தொடர்பாக வாஷிங்டனாலும் அதனுடைய நேச நாடுகளாலும் ஒத்த கருத்தைக் காணமுடியவில்லை. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடுருவலைத் தடுக்கும் கட்டுப்பாடுகளை உடைத்தெறியும் விடுதலைப் புலிகள்!

கொழும்பில் தெகிவளைக் குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகள் இருவர் பொலீசாரிடம் பிடிபட்டுள்ளனர்.

கொழும்பில் புலிகளின் மற்றொரு குகை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

பலாப்பழம்போல பொலீசாருக்கு கிடைத்தது ஒரு தகவல். அதனை வைத்துக் கொண்டு அலசத்தொடங்கிய போது இப்படியொரு குகை மாட்டும் என்று பொலீசாரே முதலில் நினைத்திருக்க மாட்டார்கள்.

ஒருபொலீஸ் நிலையத்தையேதாக்கக் கூடியளவுக்குப் போதுமான ஆயுதங்கள், வெடிமருந்துகள், கைக்குண்டுகள் என்பவை கைப்பற்றப் பட்டுள்ளன.

ஏற்கனவே கொழும்பு வெள்ளவத்தையிலும் புலிகளின் குகை ஒன்று மாட்டியிருந்தது.

அங்கும் கிட்டத்தட்ட இதேயளவு ஆயுதங்கள் தான் கைப்பற்றப்பட்டன.

கொழும்பில் தமது ஒவ்வொரு குகைகளிலும் பெருமளவான ஆயுதங்களை புலிகள் சேர்த்து வைத்துள்ளனர் என்பது தெரிகிறது.

தலைநகரப் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஒன்றை அரசாங்கம் புலிகளிடம் இருந்து எதிர்நோக்கியுள்ளது.

### ஆயுதக் குகைகளில் மூன்றே மாட்டின

இதுவரை கொழும்பில் மூன்று பாரிய புலிக் குகைகள் தான் மாட்டியிருக்கின்றன.

கொழும்புக்கு ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் கொண்டுவருவதற்கு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தாராளமாகக் கொண்டு வந்து தமதுபல குகைகளை கொழும்பில் உருவாக்கிவைத்துள்ளனர் புலிகள் என்பது சற்று அதிர்ச்சியான, ஆனால் உண்மையான தகவல்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் அன்றைய ஜனாதிபதி பிரேமதாசாவுடன்பேச்சு நடத்தியபோது கொழும்பில் தமது குகைகளுக்கான இடங்களையும் புலிகள் பார்த்து வைத்து விட்டனர்.

ஆனால் சமீபகாலத்திலும் அதாவது பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்த பின்னுங்கூட கொழும்புக்கு புலிகளின் ஆயுதங்களும், வெடி மருந்துகளும் கொண்டு வரப்பட்டன என்பதும் உண்மை.

பிரேமதாசாவுடன் பேச்சு நடத்திய காலத்தில் கொழும்பில் புலிகள் இயக்கத்தினரால் சுதந்திரமாக நடமாட முடிந்தது; பகிரங்கமாக வீடுகள் எடுத்துத் தங்கமுடிந்தது,

ஆனால், அப்போது கூட தமக்குத் தேவையான இரகசிய இடங்களை யாருக்கும் தெரியாமல்தான் புலிகள் வைத்துக் கொண்டனர்.

புலிகளின் உளவுப் பிரிவினர் கூட பகிரங்கமாகத் தம்மை இனங்காட்டவில்லை.

அதனால்தான்பிரேமதாசாவுடன் பேச்சு முறிந்த பின்னரும் கொழும்பில் புலிகளின் இரகசியக் குகைகள் பாதுகாப்பாக இருந்தன.

கொழும்பில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பல்வேறு ரூபங்களில் தொடர்ந்து தங்கியிருக்கவும் முடிந்தது.

அதாவது தாம் சுதந்திரமாக நடமாடிய பகுதிகளை விட்டும், பகிரங்கமாக இருந்த வீடுகளை விட்டும் புலிகள் இயக்கத்தினர் விலகிச் சென்றனர்; அடையாளங் காணப் படத்தக்கதாக நடமாடிய புலிகள் இயக்க உறுப்பினர்களும் திரும்பிச் சென்றனர்.

### ஊடுருவல் தொடர்ந்தது

பிரேமதாசா அரசுடன்பேச்சு நடத்திய காலத்திற்கு முன்பும், பேச்சு முறிந்த காலத்திற்கு பின்பும் கொழும்பில் புலிகள் இயக்கத்தினரின் ஊடுருவல் இருந்து கொண்டே இருந்தது.

அதுபோல பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து ஜனாதிபதி சந்திரிகா புலிகளுடன் பேசிய போது கொழும்பில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பற்றிய தேடுதல் மற்றும் கண்காணிப்புக்கள் தளர்ந்திருந்தன; வீதிச் சோதனைகளின் இறுக்கங்கள்குறைந்திருந்தன.

அந்தச் சந்தர்ப்பத்திலும் கொழும்புக்குள் புலிகள் இயக்கத்தினரின் ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டன.

கிடைக்கும் வாய்ப்புக்களையும் புலிகள் ஒருபோதும் தவறவிடுவதில்லை. அதேசமயம் புலிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்காக என்று போடப்படும் கட்டுப்பாடுகளையும் புலிகள் ஏதோ ஒரு வழியாகப் புகுந்து உடைத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

பேச்சுவார்த்தை போன்ற வாய்ப்புக்கள் இல்லையென்றால் புலிகளால் கொழும்புக்குள் வந்திருக்கவே முடியாது; ஆயுதங்கள், வெடி மருந்துகள் என்பவற்றைக் கொண்டு வந்திருக்க இயலாது என்று சொல்வதற்கில்லை.

## ஆயுதங்களை மறைத்து வைப்பதற்கு கொழும்பில் இரகசிய இடங்கள் உண்டு

ஏனெனில் பிரேமதாசாவுடன் பேச்சு நடத்திய காலத்திற்கு முன்னரே கடும்சோதனைகளையும் தாண்டி கொழும்புக்குள் கிலோ கிலோவாக புலிகள் வெடி மருந்தைக் கொண்டுவந்து சேர்த்தனர்.

கொழும்பு புறக்கோட்டை கார்க்குண்டு வெடிப்பு, கொழும்பு மருதானைக் கார்க்குண்டு வெடிப்பு போன்ற புலிகள் இயக்க நடவடிக்கைகள் அதற்குச் சான்று.

### படையினரால் தடுக்க முடியாது

கொழும்புக்குள் மட்டுமல்ல இலங்கையில் வேறெந்த பகுதிகளுக்குள்ளும் கூட புலிகளது ஊடுருவலை பாதுகாப்புப் படையினரால் முற்றுமுழுதாக தடுக்க முடியாது.

மட்டக்களப்பு நகர், திருமலை நகர், வவுனியா நகர் போன்ற படையினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் கூட புலிகளின் நடமாட்டம் இருக்கிறது. அதனை உறுதிசெய்யும் விதமான சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

திருமலை நகரில் நடைபெற்ற சம்பவங்கள், சமீபத்தில் வவுனியாவில் நடைபெற்ற சம்பவம் போன்றவற்றுக்குக் காரணமானவர்கள் தப்பிச்செல்லவும் முடிந்திருக்கிறது.

### வெறுப்பை சம்பாதிப்பதே பலன்

கொழும்புக்கு புலிகள் வருவதை தடுக்க வவுனியா தாண்டிக்குளத்தில் பயணிகளைத் தாமதப்படுத்துவதால் வெறுப்பைச் சம்பாதிப்பது மட்டுந்தான் படையினரும், அரசாங்கமும் கண்டு வரும் பலன்.

ஏதோ கொழும்புக்குள் வருவதற்கு தாண்டிக்குளம் மட்டும் தான் 'ஒன்றே ஒன்று கண்ணே கண்ணு' என்று இருக்கும் பாதை போல, அங்கு கெடுபிடிகள் கொடி கட்டிப் பறக்கின்றன.

வன்னியில் இருந்து ஒரு படகில் திருமலைக்கோ, மட்டக்களப்புக்கோ சென்று புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் கொழும்பு வருவது ஒன்றும் கஷ்டமல்லவே. அது தவிர வட பகுதியைச் சேர்ந்த புலிகள் மட்டுந்தான் கொழும்புக்குள் ஊடுருவ வேண்டும் என்று புலிகளுக்குள் ஒரு விதி இருக்கிறதா? இல்லையே!

திருமலை, மட்டக்களப்பு, பொதுவாகச் சொன்னால் வடக்கு—கிழக்கில் இருந்து தமிழ் மக்கள் வெளியே வரக் கூடிய சகல தரைப் பாதைகளையும் அடைத்து விட்டால் கூட புலிகளுக்கு பாதிப்பு நேராது.

இருக்கவே இருக்கிறது கடல் பாதை. கடலுக்குள் 24 மணி நேரமும் வேலி அடைத்தது போல கடற்படையினரை நிறுத்தி வைக்க முடியுமா?

இந்தியக் கடற்படையினர், கடலோர ரோந்துக் கப்பல்கள், சுங்கப் பிரிவினர் ஆகியோர் தமது கண்ணில் விளக்கெண்ணெயை விட்டுக் கொண்டு காவல் இருக்கிறார்கள். ஆனாலும் இன்று வரை தமிழக கடற்கரையின் ஏதோ ஒரு முனை வரை புலிகளின் அதிவேக விசைப் படகுகள் சென்று திரும்புகின்றன.

எரிபொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்கள் போன்றவற்றை தமிழகத்தில் இருந்து புலிகள் தருவித்துக் கொண்டு தான் இருக்கின்றனர்.

கொழும்புக்கும் சமீபகாலமாக கடல் பாதை வழியாகவே புலிகள் இயக்கத்தினர் வெடிமருந்துகளை அனுப்பி வைத்தனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் புலிகள் இயக்க உளவுப்பிரிவைச் சேர்ந்த நெல்சன் என்பவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட அன்று தான் அவர் வன்னியில் இருந்து கடல் மார்க்கமாக புத்தளம் வந்து, அங்கிருந்து கொழும்பு வந்தார். கடல் பாதை வழியாக அவர் பல முறை போக்குவரத்து நடத்தியிருக்கிறார்.

### வந்து போகின்றனர்

வவுனியா தாண்டிக்குளத்தில் 'புலிகளை வரவிடாமல் தடுக்கிறோம்பாருங்கள்' என்று படையினர் மல்லுக்கட்டிக் கொண்டு நிற்க. புலிகளோ 'ஹாயாக' கடல் பாதைகள் வழியாகப் போக்குவரத்து நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

கடல் பாதை வழியாக பெருந்தொகையான வெடி மருந்துகள் கொண்டுவரப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு பகுதி தான் சில மாதங்களுக்கு முன்னர்கொழும்பில் சில குப்பைத் தொட்டிகளுக்குள் காணப் பட்டன.

தெகிவளையில் சிக்கியுள்ள புலிகளின்குகைதான் கொழும்பில் புலிகளின் பெரிய குகையுமல்ல, கொழும்பில் புலிகளின் கடைசிக் குகையுமல்ல.

தெகிவளையில் இருந்ததை விடப் பெரிய ஆயுதக் குகைகள் வேறு பல கொழும்பில் இருக்கலாம். தற்போது கைது செய்யப்பட்டவர்களுக்கு தெரியாதளவுக்கு அவை இரகசியமாக வைக்கப்பட்டிருக்கலாம்.

> கொழும்பிலிருந்து வெளியாகும் ''தினமுரசு'' சஞ்சிகையின் வார இதழில் ''அந்த நாலாவது குண்டு எங்கே?'' என்ற தலைப்பில் ''நாரதர்'' எழுதிய ''எக்ஸ்ரே ரிப்போர்ட்'' இங்கு மறு பிரசுரஞ் செய்யப்படுகிறது.
>
> (ஆ-ர்)

### நான்காவது குண்டு எங்கே?

தெகிவளை ரயில் குண்டு வெடிப்புத் தொடர்பாக மட்டுமே தற்போது கைது செய்யப்பட்டுள்ள புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவருக்கும் தெரிந்துள்ளது. வேறு விவரங்கள் பெரியளவுக்குத் தெரியவில்லை.

அது மட்டுமல்ல, மற்றொரு தகவலும் பாதுகாப்புத் தரப்பின் புருவங்களை உயரவைத்துள்ளது.

தெகிவளை ரயில் குண்டு வெடிப்பில்நான்குபேர் குண்டுகளைக் கொண்டு சென்று வைப்பதாக இருந்ததாம்.

நான்கு பேரில் ஒருவர் பெண் புலி. குறிப்பிட்ட தினத்தன்று நான்கு பேரும் குண்டுகளுடன் வேறு திசைகளில் பிரிந்து ஒரே இலக்கை நோக்கிச் செல்வதாகத்தான் ஏற்பாடு.

திட்டமிட்டபடியே நடந்த போதும், ஒருவர் மட்டும் ரயிலில் குண்டுடன்ஏறவில்லை அவர் பெண் புலி. குறிப்பிட்ட பெண் புலி எங்கே போனார்? என்ன ஆனார்? என்பது குறித்து தற்போது கைது செய்யப்பட்டவர்களுக்குக் கூட விவரம் தெரியவில்லை.

இடைவழியில் ஏதாவது எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு குறிப்பிட்ட பெண்புலி குண்டுடன் திரும்பிச் சென்றிருக்கலாம். தற்போது அந்தப் பெண் புலியும், குண்டும் எங்கே? என்ன விபரீதம் நேரப் போகிறதோ? என்பது தான் பாதுகாப்புத் தரப்பினரின் அச்சம்.

எனினும், மூன்று பேர் மட்டுமே குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டனர் என்று மட்டுமே பாதுகாப்புத் தரப்பினர் கூறியுள்ளனர். நாலாவது நபர் தொடர்பாக வெளியே அதிகம் சொல்லாமல் விட்டுள்ளனர்.

### சயனைட் இல்லை

தற்போது கைது செய்யப்பட்டுள்ள இருவரும் சந்தேகம் வராதளவுக்கு தமது நடமாட்டத்தை வைத்திருந்தனர். ஒருவர் சலூனில் வேலை பார்த்தவர். மற்றவர் ரேடியோ திருத்தும் தொழில் செய்தவர்.

இரண்டுமே பல பேருடன் பழகக் கூடிய, பலருடன் சிவராகப் புலிகளும் வந்து சென்றால் யாருக்கும் சந்தேகம் வராத தொழில்கள்-

கைது செய்யப்பட்ட இருவருமே சயனைட் குப்பிகளை வைத்திருக்கவில்லை.

கொழும்பில் திடீர்க் கைதுகளில் நூற்றுக் கணக்கான இளைஞர், யுவதிகள் அள்ளிக் கொண்டு செல்லப்படுகிறார்கள். அவ்வாறான கைதுகளின் போது புலிகள் யார். பொது மக்கள் யார் என்று இனம் காண்பது சுலபமல்ல அதனால் புலிகள் இயக்க உறுப்பினர்களும் பத்தோடு பதினொன்றாகத் தடுத்து வைக்கப்படுவதும் உண்டு. சில சமயங்களில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் வெளியேவிடப் பட்டு ஏனையோர் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுதலையாவதும் உண்டு.

எனவே, இவ்வாறான சாதாரண கைதுகளின் போது சயனைட் குப்பியுடன் மாட்டினால் தான் பிரச்சினை; ஆதாரமாகிவிடும். அதனால் தற்போது கொழும்பில் நடமாடும் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சயனைட் குப்பிகளை கழுத்தில் மாட்டித் திரிவதில்லை.

சயனைட் குப்பிகள் வைத்திருக்காத புலிகள் இயக்க முக்கிய உறுப்பினர்களில் சிலர்தான் சமீபகாலத்தில் பொலீசாரின் கைகளில் சிக்கியுள்ளனர்- ஆனால் அவர்கள் கைது செய்யப்பட்டது சாதாரண கைதுகளின் போதல்ல. பொலீசாருக்கு கிடைத்த இரகசிய தகவலை வைத்து விசாரித்த போதுதான் தெகிவளை குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகள் இருவர் மாட்டினார்கள். அதற்கு முன்னர் தனது தவறான அணுகு முறையால் நெல்சன் எனும் உளவுப்புலி மாட்டினார்.

ஆதாரத்தோடு தனியாக கைது செய்யப்பட்டால் எத்தனை பெரிய மன உறுதி இருந்தாலும் பொலீசாரின் கவனிப்பில் ஓரளவேனும் உண்மை சொல்லியே ஆக வேண்டும்.

கொழும்பில் சிக்கியுள்ள புலிகள் இயக்க உறுப்பினர்களும் தமக்குத் தெரிந்த தகவல்களில் பலவற்றை சொல்லியுள்ளனர். பத்திரிகையாளர் மாநாட்டிலும் கைது செய்யப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர் வேறு வழியின்றி தோன்றினார். கிட்டத்தட்ட ஒரு ஒப்புதல் வாக்கு மூலம் போல சில தகவல்களையும் சொல்லியிருந்தார்

இது தவிர்க்க முடியாதது. அதனை உணர்ந்தே எல்லோருக்கும் எல்லாம் தெரியாத அளவுக்கு இரகசிய வேலைகள் திட்டமிடப்படுவதுண்டு. அதன் மூலம் ஒருவர் கைது செய்யப்படுவதால் ஏனையோரும், ஏனைய இரகசிய இடங்களும் மாட்டாமல் தப்பிக்கொள்ள முடியும்.

புலிகள் இயக்கத்தினரின் இரகசிய வேலை முறைகள் கச்சிதமானவை. ஒருவரை அல்லது ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்தாலும் கூட அதனை வைத்து கொழும்பில் உள்ள புலிகளது முழு விவரங்களும் கிடைத்து விடாது. புலிகளின் ஏனைய குகைகளும் லேசில் மாட்டாது.

எனவே புலிகளின் அச்சுறுத்தலில் இருந்து தலைநகர் காப்பாற்றப்பட்டுவிட்டது என்று படையினர் நிம்மதிப் பெருமூச்சு விடமுடியாது.

★ ★ ★

### போர் நிறுத்தம்

போர் நிறுத்தம் பற்றி காலத்திற்கு காலம் பேசுவது ஒரு மரபு மாதிரியாகி விட்டது.

போர் நிறுத்தம் பற்றிப் பேசுவோரின் பட்டியல் பின் வருமாறு

★ தமிழ் அரசியல் கட்சிகள்

★ தமிழ் விமர்சகர்கள் சிலர்.

★ தொண்டர் அமைப்புக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 200 தொன் வெங்காயம் கப்பலில் அழுகிவிட்டது!

கொழும்பு, செப். 15

யாழ்ப்பாணத்தில் இருந்து கப்பல் மூலம் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்ட 200 மெற்றிக் தொன் சின்ன வெங்காயம் அழுகி பாவனைக்குத வாமல் போயுள்ளதாக கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை தென்பகுதிக்குக் கொண்டுவருவதென்ற அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் 200 மெற்றிக் தொன் சின்ன வெங்காயம் கடந்த 26 ஆம் திகதி கப்பலில் ஏற்றப்பட்டது.

பருத்தித்துறையில் மூடைகளில் கட்டி ஏற்றப்பட்ட இந்த வெங்காயம் கடந்த 3 ஆம் திகதியே கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது என்று கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவித்தன.

மூடையில் கட்டப்பட்ட நிலையில் 9 நாள்கள் கப்பலினுள் இருந்ததனாலேயே வெங்காயம் முற்றாகப் பழுதடைந்து. பாவனைக்கு உதவாமல் போனதாகத் தெரிவிக்கப்பட்டது.

புலோலி, உடுப்பிட்டி, அச்சுவேலி ப. நோ. கூ. சங்கங்கள் இந்த வெங்காயத்தை கொள்வனவு செய்து கொழும்புக்கு அனுப்பியிருந்தன.

இதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து பரீட்சார்த்தமாக கொழும்புக்கு அனுப்பப்பட்ட 40 மெற்றிக்தொன் வெங்காயமும் அழுகிப் போனது தெரிந்ததே.

தற்போது இடம் பெற்றிருப்பது இரண்டாவது சம்பவம் ஆகும், (இ-3)

## லங்கா கல்யாணியில் வந்த 244 தபால் பொதிகள்

### தரம் பிரித்து விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 15

'லங்கா கல்யாணி' கப்பலில் எடுத்து வரப்பட்ட 244 தபால் பொதிகள் வெள்ளியன்று யாழ். பிரதம தபாலகத்துக்கு வந்து சேர்ந்தன.

அவை தரம் பிரிக்கப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

அதேவேளை — குடாநாட்டின் ஏனைய தபால் அலுவலகங்களுக்கான தபால் பொதிகள் நேற்று பஸ் மூலம் அந்த அந்த தபால் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டன, (இ-3)

## யாழ். செயலகத்தில் மேலதிக அரச அதிபர்கள்

### ஒரேசமயத்தில் மூவர் கடமை

யாழ்ப்பாணம், செப். 15

யாழ். செயலகத்தில் தற்சமயம் மூன்று மேலதிக அரச அதிபர்கள் பணியாற்றுகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் மேலதிக அரச அதிபர்களாகப் பணியாற்றி வந்த திரு. க. சண்முகநாதனும், திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போலும்கடந்தஜூலைமாதம் 10 ஆம் திகதி திடீரென பொதுநிர்வாக அமைச்சுக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் யாழ். மேலதிக அரச அதிபராக திரு. து. வைத்திலிங்கத்தை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு நியமித்திருந்தது.

அதேவேளை — பொது நிர்வாக அமைச்சுக்குச் சென்றிருந்த இரு மேலதிக அரச அதிபர்களும் கடந்த வாரம் யாழ். செயலகத்துக்கு திரும்பியுள்ளனர்.

மூவர்களின் இடமாற்றங்கள் குறிப்பிட்ட ஒரு காலத்துக்குப் பின் போடப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

தற்சமயம் செயலகத்தில் பணியாற்றும் மூன்று மேலதிக அரச அதிபர்களுக்கும் அரச அதிபர் நிர்வாகப் பணிகளைப் பிரித்து வழங்கியுள்ளார். (இ-3)

## தீவுப் பகுதிகளுடனான அஞ்சல் தொடர்பு சேவை

### நாளை திங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 15

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் தீவுப் பகுதிக்கான அஞ்சல் தொடர்பு சேவைநாளை ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

கடந்த 5 வருடங்களுக்கு மேலாக எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய ஆழ்கடல் தீவுகளுக்கும், குடாநாட்டுக்கும் இடையில் அஞ்சல் தொடர்பு சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

மீண்டும் நாளை முதல் இச்சேவை ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் நடைபெறவிருக்கிறது.

குடாநாட்டு மக்களுக்கும், தீவுப் பகுதி மக்களுக்கும் இடையில் மீண்டும் தொடர்புகள் ஏற்பட இது உதவும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சேவையை நடத்த வட பிரதேச போக்குவரத்துச் சபை, தீவுப்பற்று ப. நோ. கூ. சங்க படகுச் சேவை ஆகியவற்றின் உதவியை பிரதம தபாலகம் பெற்றுள்ளது. (இ- 3)

## தமிழகத்தில் புலிகள் பற்றி தவறான பிரசாரமாம்

கொழும்பு, செப். 15

தமிழ்நாட்டில் சமீபகாலமாக நடைபெற்று வரும் சில சம்பவங்களுடன் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தொடர்புபடுத்திச் செய்திகள் வெளியாகி வருகின்றன.

இது தொடர்பாக வன்னியில் இருந்து புலிகள் இயக்க தலைமைப்பீடம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அந்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

''இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான — உண்மைக்குப் புறம்பான — பொய்த் தகவல்கள் பரப்பப்படுவது குறித்து எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"இராமேஸ்வரத்தில் உள்ள தொலைக்காட்சிக் கோபுரத்திற்குக் குண்டு வைக்க எடுத்த முயற்சிக்கும் திருச்சி புகையிரத நிலையத்தில் குண்டு வைக்கப்போவதாக விடுக்கப்பட்ட பயமுறுத்தலுக்கும் மற்றும் இதுபோன்ற நடவடிக்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

''விடுதலைப் புலிகள் அமைப்பைக் களங்கப்படுத்தும் நோக்கத்துடனும் தமிழ் நாட்டு மக்களைக் குழப்பும் நோக்கத்துடனும் புலிகள் மீது பழி போடப்படுகிறது. உண்மைகளைக் கண்டறியாமல் செய்தி ஸ்தாபனங்கள் அச்செய்திகளை வெளியிடுவது குறித்து எமது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.'' — இவ்வாறு விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ் நாட்டில் தமக்கெதிராகச் செய்யப்படும் பிரசாரத்தில் இலங்கை அரசின் உளவு நிறுவனங்கள் மீதும் புலிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர். (உ)

## கல்முனையில் பார்சல் குண்டு: ஒருவர் காயம்

கொழும்பு செப். 15

கல்முனை பிரதான தபாலகத்துக்கு வந்து சேர்ந்த பார்சல் ஒன்றைத் தரம்பிரித்த போது அந்தப் பார்சலுக்குள் இருந்த குண்டு வெடித்தது.

பார்சலைத் தரம்பிரித்த தபால் சேவகர் காயம் அடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## மாணவருக்கு ஊக்குவிப்புப் பரிசில்கள்

யாழ்ப்பாணம் செப். 15

சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண விஜயத்தின் நூற்றாண்டு நினைவுச் செயல் திட்டத்தின் கீழ் —

கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் 11 பேருக்கு —

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் ஊக்குவிப்புப் பரிசில்களை வழங்கி வருகிறது.

அப்பியாசக் கொப்பிகள், பேனாக்கள், அரிசி, பால்மா என்பன அண்மையில் வழங்கப்பட்டன.

தீபாவளியை முன்னிட்டு உடுபுடைவைகள் அன்பளிப்பு செய்யப்படும். பருத்தித்துறை இலங்கை வங்கி ஊழியர்களும் இத் திட்டத்துக்கு உதவுகின்றனர். (அ)

## சாயி சேவா நிலையத்தில்

யாழ்ப்பாணம், செப். 15

யாழ்ப்பாணம் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில், அடியார்கள் தியானம், பிரார்த்தனை, சேவை முதலியனவற்றைச் செய்வதற்கு வசதியாக —

நிலைய மண்டபம் தினமும் மு. ப. 9மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் திறந்து வைக்கப்படுகிறது.

வியாழக்கிழமைகளில் பாலவிகாஷ் வகுப்புகளும், ஞாயிற்றுக்கிழமைகளில் சத்சங்கமும் பி.ப 2.30 மணி முதல் 3.15 மணி வரை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## உணவுப் பொருள்களுடன் மேலும் மூன்று கப்பல்கள்

யாழ்ப்பாணம், செப். 15

குடாநாட்டுக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் மேலும் மூன்று கப்பல்கள் வெள்ளியன்று காங்கேசன் துறைக்கு வந்து சேர்ந்தன.

''குமண'', ''சஜிந்த'', ஆகிய கப்பல்களும், மற்றும் ஒரு கப்பலுமே இந்த மூன்று கப்பல்களும் ஆகும்.

ஏற்கனவே எரிபொருள்களுடன் வந்த கப்பல் ஒன்றும், 'லங்கா கல்யாணி', ''லங்கா முடித'', ''ரீயூனியன்'' கப்பல்களும் காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்துள்ளன.

காங்கேசன் துறையில் ''லங்கா முடித'', ''லங்கா கல்யாணி'' ஆகிய கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்படுகின்றன.

பருத்தித்துறையில் ''ரீயூனியன்'' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்படுகின்றன.

ஏனைய கப்பல்கள் துறைமுகத்துக்கு வெளியே தரித்துள்ளன. (இ-3)

## ஊடுருவலைத் தடுக்கும் ...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள், மனித உரிமை அமைப்புக்கள்.

இந்த மூன்று தரப்பினருக்கும் இன்றைய யுத்தத்துக்கும் இடையே எவ்வாறான தொடர்புகள் இருந்தாலும், யுத்தத்தில் ஈடுபடும் தரப்புக்களின் மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய பலம் மேற்கண்ட மூன்று தரப்பினருக்கும் கிடையாது.

*ஏமாற்று வித்தை*

சில தமிழ் அரசியல் கட்சிகள் தாம் ஒன்றும் மோசமானவையல்ல என்று தமிழ்மக்கள் நம்பவேண்டும் என்பதற்காக போர் நிறுத்தம் பற்றி பேசிக் கொண்டிருக்கின்றன. மறுபுறத்தில் அக்கட்சிகளின் ஆயுதம் தாங்கிய உறுப்பினர்கள் படையினருடன் சேர்ந்து புலிகளைத்தேடி வேட்டைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

அரசிடம் போர் நிறுத்தம் கோரும் குறிப்பிட்ட தமிழ் கட்சிகள் குறைந்த பட்சம் தமது உறுப்பினர்களை யாவது புலிகளுக்கு எதிரான போரை நிறுத்துமாறு செய்யலாம்.

மட்டக்களப்பு, வவுனியா போன்ற பகுதிகளில் படையினரை மிஞ்சுமளவுக்கு ஆயுதம் தாங்கிய சில அமைப்புக்கள் அத்துமீறல்களில் ஈடுபட்டு வருகின்றன. போர் நிறுத்தம் இருக்கட்டும். முதலில் தமது அத்துமீறல்களை யாவது அவை நிறுத்தட்டும். ஆக, தமிழ் கட்சிகளின் போர் நிறுத்தக் கோரிக்கை அரசியல் ரீதியான ஒரு அருமையான ஏமாற்று வித்தை மட்டுமே!

சரியோ, தவறோ தாம் சொல்வதற்கும் செய்வதற்கும் இடையேயாவது வேறுபாடு இல்லாதளவுக்கு தமிழ்க் கட்சிகள் தெளிவுடன் இருந்தாலாவது நல்லது.

*விமர்சகர்கள்*

அடுத்தது விமர்சகர்கள்! இவர்களில் சிலருக்கு நடக்காது என்று தெரிந்தாலும் எழுதுவதற்கு ஏதாவது தேவை. அதனால் சூழலுக்கு நேர்மாறாக எதையாவது சொல்லிக்கொண்டிருப்பார்கள்.

மற்றொரு பகுதியினருக்கு போர்நிறுத்தம் வரவேண்டும் என்பது விருப்பம். வருமோ வராதோ அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பதில் ஒரு திருப்தி.

மனித உரிமை அமைப்புக்ளைப் பொறுத்தவரை குறிப்பிட்ட சில பொது நிகழ்வுகளையொட்டி அரசிடமும், புலிகளிடமும் போர் நிறுத்தம் கேட்க முடியும்.

தமக்குச் சாதகமா இல்லையா என்று இருதரப்பும் தனித் தனியே பரிசீலித்து பதில் சொல்லலாம்.

ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சையை முன்னிட்டு யுத்த நிறுத்தம் செய்யலாம் என தொண்டர் நிறுவனம் ஒன்று விரும்பியது.

புலிகள் அதனை உடனடியாகவே நிராகரித்து விட்டனர்.

காரணம்:- படையினர் கைப்பற்றிய பகுதியில் பரீட்சைகள் நன்றாக நடக்க புலிகள் எப்படி ஒத்துழைப்பது? படையினர் நிலைகொண்டுள்ள யாழ் குடாநாட்டில் எந்தவொரு காரியமும் இடையூறு இல்லாமல் நடக்கக் கூடாது என்பதுதான் புலிகளின் நிலைப்பாடு. எனவே தமது நிலைப்பாட்டுக்கு மாறான போர் நிறுத்தக் கோரிக்கையை புலிகள் ஏற்கவில்லை.

அதன் பின்னர்தான் 'போலியோ நோய்த்தடுப்பு' தினத்துக்காக யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு தயார் என்று புலிகள் அறிவித்தனர்.

காரணம்:- 'போலியோ நோய் தடுப்பு' விடயம் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்துடன் (யுனிசெவ்) தொடர்பு உடையது; அது தவிர குழந்தைகளின் ஆரோக்கியம் சம்பந்தப்பட்டது' யாழ் குடாநாட்டில் கூட உணவுப்பொருள்கள் மற்றும் அத்தியாவசிய சேவைகள் விடயத்தில் மட்டும் குறுக்கிட மாட்டோம் என்று புலிகள் முன்னரே கூறியிருந்தனர்.

எனவே-போலியோநோய்த் தடுப்பு தினத்தில் மட்டும் போர் நிறுத்தம் செய்வது சர்வதேச ரீதியிலும் புலிகளுக்கு நல்ல பெயர் தேடித்தரும். அதேநேரம் அதனால் அரசுக்கும் எவ்வித சாதகமும் ஏற்பட்டுவிடாது. இரண்டையும் கணக்குப் போட்டுத்தான் போலியோ தடுப்பு தினத்துக்கான போர் நிறுத்த அறிவித்தலைப் புலிகள் வெளியிட்டனர்.

அதுமட்டுமல்ல ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு அமைப்பான யுனிசெவ்வின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சூட்டோடு சூடாக, ஐக்கிய நாடுகள் சபைக்கு யாழ். வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் என்ற பெயரில் ஒரு மகஜர் அனுப்பப்பட்டதையும் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

மகஜரில் இருப்பவை யாவும் புலிகள் இயக்கத்தின் உறுதியான நிலைப்பாடுகள்.

'ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் வெளியேற வேண்டும்' என்பது முக்கிய நிபந்தனை

இந்த நிபந்தனையை உடனடியாக விட்டுக்கொடுப்பது புலிகளுக்கு கௌரவப் பிரச்சினை. அதுதவிர முல்லைத் தாக்குதலின் பின்னர் தமது உளவியல் பலம் உயர்ந்த நிலையில் அதனை தளரச் செய்யும் போர்நிறுத்தம் ஒன்றுக்கு புலிகள் உடனடியாக முன்வரப் போவதுமில்லை.

அதே சமயம், புலிகளுக்கு எதிரான வெற்றி என்பதை மையமாகக் கொண்டுள்ள அரசாங்கம் புலிகளின் நிபந்தனையை தற்போதைக்கு ஏற்கவே முடியாது. அப்படி ஏற்றுக்கொண்டால் அது அரசாங்கக்கட்சியின் அரசியல் தற்கொலைக்கு சமன்.

எனவே – 'போலியோ தொடர்பான போர்நிறுத்தத்தை வைத்துக்கொண்டு' படைகளுக்கும், புலிகளுக்கும் இடையிலான போர்நிறுத்தம் உடனே சாத்தியம் என்று கருத இடமில்லை. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### இசை வகுப்புகள்

சகல வாத்தியங்களும் கற்பிக்கப்படும். புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். தொடர்பு: செல்வி வாசுகி ரங்கன், இல: 16/2, கச்சேரி, யாழ்ப்பாணம். (42719)

### பாலர் ஆசிரியராக

தபால் வழியில் பாலர் ஆசிரியர் பயிற்சி — க. பொ. த (சா/த) கடைசித் தகைமை யாகும். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா: திரு. வீ. கே. கந்தசாமி, 20, அச்சக ஒழுங்கை, கொக்குவில்கிழக்கு, கொக்குவில். (42437)

### திருமண சேவை

மல்லாகத்தில் இயங்கிய துர்க்கா திருமண சேவை தற்பொழுது மாயக்க பிள்ளையார் கோவிலடி, தம்பசிட்டி, புலோலி மேற்கு, புலோலி என்னும் முகவரியில் இயங்குகிறது. நாவலர் றோட், பிறவுண் றோட் சந்தியில் புதனும், திங்களும் சந்திக்கலாம். படத்துடனும், குறிப்புடனும் வரவும். (42697)

### நீமியா

நீமியா இயற்கைப் பசளையை அடிக்கட்டு பசளையாக பாவித்தால் மண்ணை வளப்படுத்தி அமோக விளைச்சலுக்கும் பயிர்களின் நோய்த் தாக்கத்திலிருந்தும் பாதுகாக்கும். அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கும் மில்க்வைற். (சி-2 869)

### ஆங்கிலம்

ஆங்கிலம் வீட்டிற்கு வந்து கற்பித்துக் கொடுக்கப்படும். யாழ். நகர எல்லைக்குள் மட்டும். ஆண்டு 11 முதல் கீழ் வகுப்பு வரை, பாடத்தில் குறைவானவர்களுக்கு அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். கடிதத் தொடர்பு: இல: 524, C/o உதயன், யாழ்ப்பாணம். (42653)

### புலமைப் பரிசில் (97)

ஆண்டு 4 கற்கும் மாணவர்களுக்கு 1997 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வகுப்புகள் 15-9-96 இல் ஆரம்பமாகின்றன. ஒவ்வொரு ஞாயிறும் பயிற்சிப் பரீட்சைகள் நடைபெறும். அஸ்ரன் கல்வி நிலையம், 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (42716)

### விற்பனைக்கு

இரும்புப் பெட்டி (அயன் சேவ்); பேஜோ 203 1ஸ்ரீ மொடல் கார் உதிரிப் பாகங்களுடன்; சுமித் மின்சார சமையல்அறைப் பாத்திரங்கள் விற்பனைக்கு உண்டு. முகவரி இல: 608, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (42698)

### மணமகள் தேவை

ஜேர்மனியில் வசிக்கும் 32 வயதுடைய மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை. கொழும்பு வந்து திருமணம் செய்யலாம். நட்சத்திரம் உத்தரம். திருமண சேவை செ. விஜயரட்ணம், நவாலி கிழக்கு, மானிப்பாய். (42710)

### ஆங்கிலம், கணிதம்

O/L 96, ஆண்டு 8, 9, 10 மாணவர்களுக்கும் தவணைப் பரீட்சையில் மிக உயர்ந்த பெறுபேறுகளுடன் சித்தி அடைய அனுபவமுள்ள B.Sc. ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி (சிவன் கோவில் மேற்கு வீதி) திருநெல்வேலி. (42721)

### மணமகன் தேவை

திருவாதிரை நட்சத்திரம், 4 ஆம் கால். வயது 27. செவ்வாய் 2 இல். க. பொ. த உயர்தரம் சித்தி அடைந்த மணமகளுக்கு சிறு உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை. திருமண சேவை, செ. விஜயரட்ணம், நவாலி கிழக்கு, மானிப்பாய் (42709)

### நூல் நிலையம்

ஈழத்து, தமிழக எழுத்தாளர்களின் சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள், சிறுவர் இலக்கியங்களை வாசித்து மகிழ்ந்து பயனடைய வாருங்கள். லிங் லெண்டிங் லைப்ரரி, Ling Lending Library, இல: 41, தபாலக வீதி, சாவகச்சேரி. புத்தகங்களுக்குத் தரும் தொகை செலவல்ல - மூலதனமே. (42689)

### உடன் விற்பனைக்கு

10C சோலரும், சோலர் லாம்பும் 6000/-, ஒரு லேடிஸ் சைக்கிளும் 2750/- விற்பனைக்குண்டு. தொடர்பு: ஏபிரகாம், இல: 75, கொழும்புத்துறை வீதி, (பிள்ளையார் கோவில் அருகில்) யாழ்ப்பாணம். (42723)

## G.C.E. (O/L) "96"

விசேட கணித வகுப்பு

ஆசிரியர்:- P. வினோத்குமார்

ஆரம்பம்:- 16 - 09 - 96 (திங்கள்)

**அஸ்ரன் கல்வி நிலையம்**

4 ஆம் குறுக்கு, யாழ்ப்பாணம்.

(42717)

---

உ

முன்னவன் துணை

நீர்வேலி அருள்மிகு

ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில்

## வருடாந்த மகோற்சவம் - 1996

மேற்படி ஆலய வருடாந்த விழாக்கள் வழமை போல் புரட்டாதி மாதம், செவ்வாய்க்கிழமை (17 - 09 - 96) அன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 12 நாள்கள் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

இரதோற்சவம்:- வியாழன் 26-09-1996 காலை 7மணி

தீர்த்தோற்சவம்:- வெள்ளி 27-09-1996 காலை 8-30 மணி

ஏனைய உற்சவங்கள் முறையே மு.ப.9-12மணிக்கு இடையிலும்; பிற்பகல் 3-6 மணிக்கு இடையிலும் நடைபெறும்.

- பரிபாலனசபை -
ஆலய தேவஸ்தானம்.

நீர்வேலி. (42718)

---

வடலியடைப்பு புதரானை

## ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய சதுர்த்தி விழாவும் 1008 சங்காபிஷேகமும்

16 - 09 - 96 திங்கட்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து விநாயகப் பெருமான் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் பிற்பகல் 4-00 மணிக்கு வீதியுலா வருவார். அத்துடன் விசேட மேளக் கச்சேரிகளும் நடைபெறும்.

அடியார்கள் இக் காட்சியினைக் கண்டுகளித்து விநாயகப் பெருமானின் இஷ்டசித்திகளைப் பெற்று உய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம். பகல் அன்னதானமும் நடைபெறும்.

விழா உபயகாரர்களும்,
பரிபாலன சபையினரும்.

(42704)

---

"கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்; இதனிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்" - சங். 126: 3

## 2ஆம் ஆண்டுக்குள் காலடி எடுத்து வைக்கும் "மேசியா நகை மாடம்"

விசுவாசிகள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரையும் வரவேற்கிறது.

இங்கனம்:

**மேசியா நகை மாடம்**

11/C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(42695)

---

## கணேஷ் ஆர்ட்ஸ் அக்கடமி

302, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

பின்வரும் வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

சங்கீதம்:- செல்வி T. சந்தானலட்சுமி
ஓகன்:- திரு. அருணா (அருணா இசைக்குழு)
மிருதங்கம்:- பிரபல ஆசிரியர்
ஆரம்பம்:- 16 - 09 - 96

பயில விரும்பும் மாணவர்கள் பதிவுகளை உடன் பெற்றுக் கொள்ளவும்.

வீணை, நடனம், சித்திரம் ஆகிய வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

— நிர்வாகி

(42707)

---

உ
சிவமயம்

## ★ திருமண அழைப்பு ★

| மணமகன் | மணமகள் |
|---|---|
| திருநிறை செல்வன் **N.R.K இரத்தினகுமார்** (நாதஸ்வர வித்துவான் N. R. கோவிந்தசாமியின் புதல்வன்) | திருநிறை செல்வி **துஸ்யந்தி** |

காலம்: 15 - 09 - 1996 ஞாயிற்றுக்கிழமை
முகூர்த்தம்: காலை 9-03 மணி முதல் 10-33 மணி வரை
இடம்: இணுவில் பரமானந்தவல்லி அம்மன் கோவில்

இங்ஙனம்,
தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி கோவிந்தசாமி குடும்பத்தினர்
திருமதி N. R. சின்னராசா குடும்பத்தினர்
திரு. N. R. சந்தானகிருஷ்ணன் குடும்பத்தினர்

வரவேற்பாளர்கள்:

K. இரவீந்திரன் குடும்பத்தினர்
N. R. K. வசந்தகுமார் குடும்பத்தினர்
N. R. K. உதயகுமார் குடும்பத்தினர்

"வசந்தவாசம்"
கந்தசாமி கோவிலடி,
இணுவில்.

(தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை)

---

## நீங்கள் ஏன் அதிக கட்டணம் செலுத்த வேண்டும்?

★ நம்பிக்கையான சேவைக்கு
★ நாணயமான சேவைக்கு

**கறுப்பு வெள்ளைப் படங்களுக்கு**

## த ஸ்ருடியோவை

நாடுங்கள்.

★ நியாயமான கட்டணத்தில்
★ தரமான புகைப்படங்கள்

| | |
|---|---|
| தேசிய அடையாள அட்டை | ரு. 35/- மட்டும் |
| விசேட அடையாள அட்டை | ரு 35/- மட்டும் |
| தபால் அ. அட்டை/பாஸ்போர்ட் $2\frac{1}{2}$ x 2 அளவுகள் | ரு. 75/- மட்டும். |
| ஒரு நாள் சேவை 75/- மட்டுமே (3 பிரதிகள்) | |

யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கென அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு புகைப்பட நிலையம்

**த ஸ்ருடியோ**

பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(சதோசவுக்கு அருகில்)

[42666]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியூருக்கான தபால் சேவையை சீர்செய்ய விரைவில் நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்15

குடாநாட்டிலிருந்து வெளியூர்களுக்கான தபால்களை விரைவாக அனுப்பவும் —

வெளியூர் தபால்களை குடாநாட்டுக்கு விரைவாக எடுத்து வரவும்—

புதிய நடைமுறை ஒன்று அமுல்செய்யப்படும்.

இது குறித்து தற்போது ஆராயப்படுவதாக வடபிராந்திய பிரதி அஞ்சல் மா அதிபர் திரு. சு. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

சிவில் இணைப்பதிகாரியுடன் இது தொடர்பாக பேச்சு நடத்தி விரைவில் இந்த நடைமுறை அமுலுக்குவரும் என்றும் அவர் சொன்னார்.

புதிய நடைமுறையின்படி, அவசர தபால்களை விமானம் மூலம் அனுப்பவும், சாதாரண தபால்களை கப்பல் மூலம் எடுத்துச் செல்லவும் முடியும் என்றும் கூறினார். (இ-3)

# உதயன்

## ஆண்டியும் சங்கும்

வடக்கு -கிழக்கு மாகாண சிவில் நிர்வாகத்துக்கு உயிரூட்டுவதற்காக, ஜனாதிபதி இணைப்புக்குழு ஒன்றை நியமித்திருக்கிறார்.

புனர்வாழ்வு, புனரமைப்புத்துறை அமைச்சர் எம்.எச் எம். அஷ்ரப் இந்தக் குழுவின் தலைவராக இருப்பார்.

இந்த இணைப்புக் குழுவில் வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் என்று மொத்தம் 150 பேருக்கு மேற்பட்டோர் அங்கம் வகிப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாண இணைப்புக்குழு ஒரு தற்காலிகமான ஏற்பாடே என்றும், இது ஓர் இடைக்கால நிர்வாக சபையாக இருக்க மாட்டாது என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண மக்களின் முன்னேற்றத்துக்குத் தேவையான சேவைகளைத் திட்டமிடுதல், அமுல் செய்தல், மத்திய, மாகாண அமைச்சு மட்டங்களிலான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுதல் ஆகியனவே புதிய இணைப்புக் குழுவின் பிரதான இலக்குகளாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

இந்த இணைப்புக் குழுவினால் மேற்சொன்ன இலக்குகளை எய்த முடியுமா. எதிர்பார்க்கும் பலன் கிடைக்குமா என்பதில் பலருக்கும் சந்தேகம் உண்டு.

கொழும்பில் கூடி இது குறித்து ஆராய்ந்த ஐந்து தமிழ்க் கட்சிகளும் புதிய குழுவினால் எவ்வித பயனும் கிடையாது என்ற கருத்தையே வெளிப்படுத்தின.

இந்த இணைப்புக் குழுவுக்கு அரசியல் அதிகாரம் எதுவும் இருக்கப்போவதில்லை. அதனால் மத்திய அரசின் நிர்வாக ஆணைக்கு உட்பட்டே குழு இயங்கும். குழுவில் அங்கம் வகிக்கவுள்ள அரச அதிகாரிகள், மத்திய அரசின் கொள்கையை அனுசரித்தே செயற்படுவர்.

அவர்களே குழுவில் கூடுதல் எண்ணிக்கையில் இடம்பெறப் போவதால், நாடாளுமன்ற மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அனேக சந்தர்ப்பங்களில் வெறும் பார்வையாளராகவோ அல்லது கண்காணிப்பாளராகவோ மட்டுமே செயற்பட முடியும்.

இணைப்புக் குழுவில் பல தரப்பட்ட, பல துருவப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வேலைத்திட்டங்களை வகுப்பதில் முரண்பாடுகள் உருவாகும் சாத்தியமே அதிகம்.

பல எலிகள் சேர்ந்தால் புற்று எடுக்கா என்று ஒரு கூற்று உண்டு. இணைப்புக் குழுவில் 150 க்கும் மேற்பட்டோர் அங்கத்துவம் வகிப்பதால், பொறுப்பு யாரிடம்என்றில்லாமல் பந்து மாறி மாறி வீசப்படும்; காரியமாகாது.

சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஓர் ஆண்டி என்பது போல, இப்போது ஏதோ முக்கி முனங்கி நகர்ந்து கொண்டிருக்கும் வடக்கு - கிழக்கு சிவில் நிர்வாகம், பலவீனமுற்று சோர்வடைந்து தள்ளாடவே இணைப்புக்குழு வழிசெய்யும்.

## குடாநாட்டுக்கு மேலும் 50 புதிய பஸ்கள்

### மாணவருக்கு பருவகாலச் சீட்டு

கொழும்பு, செப். 15

யாழ். குடாநாட்டில் போக்குவரத்துச் சேவையை சீராக்க மேலும் 50 புதிய பஸ்கள் அங்கு அனுப்பப்படும் என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் நடவடிக்கைப் பிரிவுத்தலைமையதிகாரி எம். சி. பிரேமரட்ன தெரிவித்தார்.

ஏற்கனவே அங்கு அனுப்பப்பட்ட 20 பஸ்களில் 15 பஸ்களே சேவையில் ஈடுபட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

பாடசாலைப் பிள்ளைகளுக்கான பருவகாலச் சீட்டுக்கள் அங்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் குழறுபடி!

### வினாத்தாள் மாறி கொடுக்கப்பட்டது

கொழும்பு, செப். 15

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு, மாவனல்லை மயூரபாத மத்திய கல்லூரி பரீட்சை நிலையத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய தமிழ் மொழி மூல பரீட்சார்த்திகளுக்கு, வினாத்தாள் வழங்கும் போது தவறிழைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இரண்டு பகுதிகளாக நடைபெற்ற இப் பரீட்சையில் முதலில் வழங்கப்பட வேண்டிய பகுதி i க்குரிய வினாத்தாள்களுக்குப் பதிலாக பகுதி ii க்குரிய வினாத்தாள்கள் வழங்கப்பட்டன.

பகுதி i க்கு விடையளிக்க வேண்டிய நேரத்தில் மாணவர்கள் பகுதி ii க்கு விடையளிக்க வேண்டிய நிலைக்கு ஆளானார்கள் என்றும் —

இதனால் மாணவர்கள் நல்ல முறையில் பரீட்சை எழுதவில்லை என்றும் — பெற்றோர்கள் தெரிவித்தனர். (இ-3)

## வன்செயலை வெல்வதற்கு ஒரே வழி சுய தியாகமே

''இயேசு தாம் எருசலேமுக்குப்போய் மூப்பர்கள், தலைமைக்குருக்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோரால் பலவாறு துன்பப்படவும்,கொலை செய்யப்படவும், மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும் என்பதைத் தம் சீடர்களுக்கு அந்நேரம் முதல் எடுத்துரைக்கத் தொடங்கினார். பேதுரு அவரைத் தனியே அழைத்துக் கடிந்து கொண்டு 'ஆண்டவரே, இது வேண்டாம். இப்படி உமக்கு நடக்கவே கூடாது' என்றார். ஆனால் இயேசு பேதுருவைத் திரும்பிப்பார்த்து, 'என் கண்முன் நில்லாதே சாத்தானே; நீ எனக்குத் தடையாக இருக்கிறாய்; ஏனெனில் நீ கடவுளுக்கு ஏற்றவைபற்றி எண்ணாமல் மனிதனுக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகின்றாய்' என்றார்.

—மத். 16 : 21 - 23.

இயேசு இஸ்ராயேல் மக்கள் மத்தியில் உள்ள தீமைகளை வெல்ல கையாள்வதற்கு இருந்த வழியை இராயப்பர் விரும்பவில்லை. கடவுளுக்கு ஏற்ற வழிவேறு, மனிதருக்கு ஏற்ற வழிவேறு.

தீமையை வெல்ல கடவுளுக்கு ஏற்றவை என்ன?

### ஞாயிறு நற்பிரசாதம்

'' 'கண்ணுக்குக் கண்' 'பல்லுக்குப்பல்' என்று கூறப்பட்டிருப்பதைக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். மாறாக, உங்கள் வலக் கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள் ஒருவர் உங்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்து, உங்கள் அங்கியை எடுத்துக் கொள்ள விரும்பினால் உங்கள் மேலாடையையும் அவர் எடுத்துக் கொள்ள விட்டுவிடுங்கள். எவராவது உங்களை ஒரு கல் தொலை வரக் கட்டாயப்படுத்தினால், அவரோடு இரு கல் தொலை செல்லுங்கள்''

...... ''உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு காட்டுவாயாக!, 'பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக' எனக் கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்'' — மத். 5:38 — 43.

''அவர் ஒடுக்கப்பட்டார் சிறுமைப்படுத்தப்பட்டார். ஆயினும் அவர்தம் வாயைத் திறக்கவில்லை; அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக் குட்டி போலும், உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும் அவர் தம் வாயைத் திறவாதிருந்தார் — எசாயா 53:7,8.

அப்போது இயேசு, ''தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை'' என்று சொன்னார்— லூக் 23:34.

வன் செயலை வெல்வதற்கு ஒரே வழி சுய தியாகம் (Self Sacrifice) சுய மறுப்பு— நன்மை செய்வது. நன்மையே தீமையை வெல்லும்.

— அருட்திரு இருதயதாஸ்

## சாவிலும் இணைந்த தம்பதியர்

யாழ்ப்பாணம்,செப்.15

முன்னாள் ஆசிரியத் தம்பதியர் ஒரே நாளில் இரண்டரை மணிநேர இடைவெளியில் காலமானார்கள்.

கட்டப்பராயைச் சேர்ந்த முன்னாள் ஆசிரியை நாகம்மா தமது 86 ஆவது வயதில் நேற்று மு. ப. 9.30 மணியளவில் தமது இல்லத்தில் இயற்கை மரணமெய்தினார்.

அவரது மரணச் சடங்குகளுக்கான ஏற்பாடுகளை உறவினர்கள் செய்துகொண்டிருக்கையில்—

மனைவியின் இழப்பைத் தாங்க முடியாது அழுது கொண்டிருந்த அவரது கணவர் கணபதிப்பிள்ளை (வயது 87) நண்பகல் 12 மணியளவில் உயிர் நீத்தார்.

வாழ்வில் ஒரே நாளில் இணைந்த தம்பதிகள் இயற்கை மரணத்தில்(சாவில்) ஒரே நாளில் இணைவது மிகவும் அபூர்வம் என்று மக்கள் பலரும் பேசிக்கொண்டனர். (அ)

## கிளிநொச்சியில் தாக்குதல்

கொழும்பு, செப். 15

'உண்மைவெற்றி'இராணுவ நடவடிக்கை மூலம் பரந்தனைக் கைப்பற்றிய படையினர் கிளிநொச்சி மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட புலிகளின் முகாம்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்துவதாக உயர் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## வடக்கு - கிழக்குக்கு "செலுலர்" சேவை இல்லை

### பாதுகாப்பு அமைச்சு அனுமதிமறுப்பு

கொழும்பு, செப். 15

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு ''செலுலர்'' தொலைபேசிச்சேவை பாதுகாப்புக் காரணங்களுக்காக வழங்கப்பட மாட்டாது.

நாடாளுமன்றத்தில்தபால், தொலைத்தொடர்பு பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் இத்தகவலைத் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு''செலுலர்''சேவையை வழங்கும் பொறுப்பு இரண்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

எனினும் பாதுகாப்பு அமைச்சு பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி இந்த சேவையை வழங்க அனுமதியளிக்க மறுத்துவிட்டது என்றும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார் (இ - 150)

## கடவுளாலும் கைவிடப்பட்ட மக்கள்?

வலி - வடக்கு மக்கள், காங்கேசன்துறையிலிருந்து அளவெட்டி வரை, மாதகலிலிருந்து வசாவிளான் வரை, தங்கள் சொந்த வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு ஆண்டுகள் ஆறும், நான்கும் முடிந்து விட்டன. இம்மக்கள் வெளியேற்றப்பட்டது ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில்.

இன்று பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களை மீளக் குடியமர்த்துதல் குறித்துப் பெரிதாகப் பிரசாரம் செய்கிறது. ஆனால் உண்மையில் என்ன நடக்கிறது?

வலி — வடக்கு மக்கள் மீளக் குடியமர வசதி எதுவும் செய்யப்படவில்லை. மக்கள் தங்கள் சொந்த வீடுகளைச் சென்று பார்க்க அனுமதியில்லை. சொந்த வீடுகளில் குடியமர அனுமதியில்லை. வலி — வடக்கில் உள்ள ஆலயங்களில் மக்கள் வழிபட அனுமதியில்லை. வலி — வடக்கில் உள்ள பாடசாலைகளில் மாணவர் கல்விகற்க அனுமதியில்லை.

இலங்கையின் வரலாற்றுச் சிறப்புக்கொண்ட திருத்தலமான மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மற்றும் கீரிமலை நகுலேஸ்வரர் கோவில், மாருதப்புரவீகவல்லியினால் அமைக்கப்பட்ட அளவெட்டி கும்பளாவளைப்பிள்ளையார் கோவில், அளவெட்டி அழகொல்லைப் பிள்ளையார் கோவில், தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் ஆகியவற்றுக்கு மக்கள் சென்றுவழிபட முடியாது. அத்திருத்தலங்களில் ஒழுங்கான பூசைகள், வருடாந்த மகோற்சவங்கள் நடைபெற வாய்ப்பு இல்லை.

தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, அளவெட்டி அருணோதயக்கல்லூரி, வசாவிளான் மத்திய கல்லூரி போன்ற பல கல்லூரிகள் இன்றும் இடம்பெயர்ந்த நிலையில் இயங்குகின்றன. சொந்தக் கட்டடங்களில் இயங்க முடியவில்லை.

பொன் கொழித்த விவசாய நிலங்கள் காடாகக்கிடக்கின்றன. விவசாயம் செய்ய அனுமதியில்லை.

### வாசகர் திருமுகம்

இந் நிலைமைகள் பற்றியும் வலி - வடக்கு மக்களை மீளக் குடியமர வசதி செய்யுமாறும் இப்பகுதி மக்கள், தனியாகவும் கூட்டாகவும் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர், யாழ். அரசாங்க அதிபர், அமைச்சர்கள், ஜனாதிபதி இவர்களுக்கெல்லாம் கடிதம் அனுப்பியிருந்தனர். ஆனால் இது வரை பயன் எதுவுமில்லை,

வலி — வடக்கு மக்கள் 6 வருடங்களாக அகதிகளாக மனதில் தாங்கொணா வேதனையுடன், சொல்லொணாத்துயர்களைச் சுமந்து யாழ் குடாநாட்டின் தெருக்களிலும் ஒழுங்கைகளிலும் அலைந்து திரிகிறார்கள்.

மயிலிட்டியைச் சேர்ந்த மக்கள் மருதனார்மடத்தில் இருந்து உடுவில் கிழக்கில் குடியர்மத்தப்படுகிறார்கள். குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. இதற்குப் பெயர் மீள் இடம் பெயர்வா அல்லது மீளக் குடியமர்த்தலா? அவ்வாறாயின் மீளக் குடியமர்த்தப்படுபவர்கள் யார்?

இந்தக் கேள்விக்குப் பொறுப்பு வாய்ந்த பதவியில் உள்ள யாராவது விடை தாருங்கள்.

வலி — வடக்கு மக்கள் இன்று கடவுளாலும் கைவிடப்பட்ட மக்கள்?

கோமகன்

அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் பெயர்ந்த மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பம்

## நேரடியாக மானிய குழுவுக்கு அனுப்ப அறிவுறுத்து

கொழும்பு, செப். 15

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து தற்சமயம் வேறு மாவட்டங்களில் தற்காலிகமாகத் தங்கி உள்ள பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியுள்ள மாணவர்கள், தமது அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களைத் தத்தம் பாடசாலை அதிபர்கள் மூலம் அனுப்பமுடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

இது சம்பந்தமாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் அனுமதிக்குப் பொறுப்பான உத்தியோகத்தர். திஸ்ஸ நந்தசேனவின் ஆலோசனை பெறப்பட்டுள்ளது.

இதன்படி இப்படியான மாணவர்கள் தமது படிவங்களைப் பூர்த்தி செய்து நேரடியாக பல்கலைக்கழக ஆணைக் குழுவுக்கு அனுப்ப முடியும்.

ஆனால் அந்தப் படிவத்தை நிழல் பிரதியிட்டு அதிபருக்கு அனுப்பவேண்டும்.

அனுமதி தொடர்பான வேலைகள் விரைவில் பூர்த்தி செய்யப்பட விருப்பதால் சம்பந்தப்பட்ட மாணவர்கள் படிவங்களை உடன் நேரடியாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவுக்கு அனுப்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-3)

# பத்துத் தபாலகங்களுக்கு தேவையான முத்திரைகள்

## விமானம் மூலம் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம், செப். 15

குடாநாட்டில் உள்ள தபாலகங்களில் நிலவிய முத்திரைத் தட்டுப்பாட்டையடுத்து, கொழும்பில் இருந்து 10 தபாலகங்களுக்குத் தேவையான முத்திரைகள் விமானம் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் எடுத்து வரப்பட்ட 25 பொதிகள் முத்திரைகள் நேற்று அந்த அந்தத் தபாலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மானிப்பாய், சுழிபுரம், வட்டுக்கோட்டை, பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி, கொடிகாமம், யாழ்ப்பாணம், சுன்னாகம், அச்சுவேலி ஆகிய தபாலகங்களுக்கே இந்த முத்திரைகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

யாழ் பிரதம தபாலகத்துக்கு கூடுதல் பெறுமதியுள்ள முத்திரைகளும் எடுத்து வரப்பட்டுள்ளன.

மாதத்தில் இரு தடவைகள் விமானம் மூலம் முத்திரைகளை எடுத்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிரதி அஞ்சல் மா அதிபர் திரு சு. மாணிக்கவாசகர் தெரிவித்தார். (இ-3)

# சமய சந்நிதிகளில்

ஆவணிச் சதுர்த்தித் திருவிழா நாளை திங்கட்கிழமையாகும். குடாநாட்டில் உள்ள விநாயகர் ஆலயங்களில் சதுர்த்தித் திருவிழா விஷேட அபிஷேகம், பூசைகளுடன் இடம்பெறும்.

★ ★ ★

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் நாளை காலை 8-30 மணி தொடக்கம் இலட்சார்ச்சனை நடைபெறும். தொடர்ந்து பஞ்சமுக விநாயகர் வீதிவலம் வருவார். (அ-30)

★ ★ ★

தொல்புரம் மடத்துப் பிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா நாளை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். (அ-28-30)

★ ★ ★

தும்பளை நெல்லண்டை அம்மன் கோவிலில் இன்று ஞாயிறு காலை சுமார் 7மணி தொடக்கம் 9 மணி வரை சமய தீட்சை வழங்கப்படும். ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இ. சோமாஸ்கந்தராஜக் குருக்கள் சமய தீட்சையை நடத்துவார். (அ)

★ ★ ★

வடலியடைப்பு புதராளை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் நாளை ஆவணிச்சதுர்த்தி விழாவும், சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளன. பூசைகள் மற்றும் கிரியைகள் காலை 7மணிக்கு ஆரம்பமாகும். பிற்பகல் 4 மணிக்கு விநாயகப் பெருமான் வீதி வலம் வருவார். (அ)

★ ★ ★

நீர்வேலி அருள்மிகு அரசகேசரிப் பிள்ளையார்கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம் பெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

இம்மாதம் 26 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் (அ)

# விஞ்ஞானபீட மாணவரின் கல்விசார் நிகழ்ச்சிகள்

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்துக்கு தெரிவான புதிய மாணவர்களுக்கான கல்விசார் நிகழ்ச்சிகள் நாளை காலை 10 மணிக்கு விஞ்ஞான பீட பௌதிக மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன.

இம்மாணவர்களுக்கான அறிமுக விரிவுரைகளின் பின் நூலக வளம், ஆங்கில பயிற்சித் திட்டங்கள் ஆகியன பற்றி அறிவுரை வழங்கப்படும். இதைத் தொடர்ந்து கணணிப் பயிற்சியும் அளிக்கப்படும்.

இவர்களுக்கான பாடத்திட்டப் போதனைகள் அடுத்த மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் —

அதேதினம் விஞ்ஞானபீட ஏனைய மாணவர்களுக்கான விரிவுரைகளும் ஆரம்பமாகும் என்றும்— பதில் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தெரிவித்தார். (இ-3)

# ஸ்ரீலங்கா அணி வெற்றி

சிம்பாப்பே அணிக்கெதிரான முதலாவது கிரிக்கெட் ''ரெஸ்ட்'' போட்டியில் ஸ்ரீலங்கா அணி ஒரு இனிங்ஸ் 81 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ஸ்ரீலங்கா அணி தனது முதலாவது இனிங்ஸில் 349 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்து ஆடிய சிம்பாப்பே அணி முதல் இனிங்ஸில் 145 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸை விளையாடிய சிம்பாப்பே அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது.

சிம்பாப்பே அணியின் இரண்டாவது இனிங்ஸில் ஸ்ரீலங்கா அணியின் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 31 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இது ரெஸ்ட் கிரிக்கெட் விளையாட்டில் ஸ்ரீலங்கா அணி பெற்ற 8ஆவது வெற்றியாகும்.

கொழும்பில் நடைபெற்ற 5 நாள் போட்டியில் 4ஆவது நாளே சிறிலங்கா அணி வெற்றிவாகை சூடியது. (10)

# கொட்டாஞ்சேனை பகுதியில் ஆயுதங்கள் கண்டு பிடிப்பு

கொழும்பு, செப். 15

கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள விடுதி ஒன்றை கடந்த 12 ஆம் திகதி சோதனைக்கு உட்படுத்திய பாதுகாப்புப் படையினரின் புலனாய்வுப் பிரிவினர், அங்கு புதைக்கப்பட்டிருந்த ஆயுதங்களையும், துப்பாக்கிக் குண்டுகளையும் கண்டெடுத்துள்ளனர்.

தன்னியக்க கைத்துப்பாக்கி ஒன்றும், ஜே. ஆர். ரகக் கைக்குண்டுகள் இரண்டும், ரவைகள் ஐம்பதும் இந்த ஆயுதங்களில் அடங்கும்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர் ஒருவர் வழங்கிய தகவல்களின் மூலமாக இவை கண்டெடுக்கப்பட்டுள்ளன என்றும்—

புலி உறுப்பினர்களுக்கு தங்குமிட வசதி வழங்கியதற்காக 'இந்த விடுதியின் உரிமையாளரும், முகாமையாளர்கள் இருவரும் கொட்டாஞ்சேனைப் பொலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது. (இ-3)

# விருதுபெறும் நூல்கள்

இந்த வருடம் அரசாங்க விருதுபெறும் நூல்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பிரதி அமைச்சர் பேராசிரியர் ஏ. வீ. சுரவீர தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாநாட்டில் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது.

சென்ற வருடம் தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் பிரசுரமான நூல்கள் சாகித்திய விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டன.

சிறுவர் இலக்கியத்திற்கான விருதை வி. இராசையா பெறுகின்றார். ''சந்தனக் கிண்ணம்'' என்ற நூலை இவர் எழுதியுள்ளார்.

சோலைக்கிளி எழுதிய ''பாம்பு நிறைந்த மனிதன்'' என்ற நூல் கவிதைக்காகவும்—

யோ. பெனடிற் பாலன் எழுதிய ''விபச்சாரம் செய்யாதிருப்பாயாக'' என்னும் நூல் சிறுகதைக்காகவும்—

திக்வெல்ல கமால் எழுதிய ''ஒளி பரவுகிறது'' என்னும் நூல் நாவலுக்காகவும்—

எஸ். எச். எம். ஜமீல் எழுதிய ''கிராமத்து உதயம்'' என்னும் நூல் இலக்கிய ஆய்வுக்காகவும் விருதுகளைப் பெற்றுள்ளன. (இ-10)

# மீனவர் திரும்பவில்லை

நேற்று முன்தினம் கடல் அட்டை பிடிப்பதற்காக கல்முனைக் கடலுக்குச் சென்ற குருநகர் மீனவர் ஒருவர் இன்னும் வீடு திரும்பவில்லை.

அல்பிரெட் அரியதாஸ் அல்லது அல்பிரெட் விஜயன் (வயது 26) என்பவரே காணாமற்போனவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-51)

# மரண அறிவித்தல்கள்

செல்வன்

## சரவணமுத்து சரவணபவானந்தன்

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சரவணமுத்து - பராசக்தி தம்பதிகளின் மூத்த புதல்வன் சரவணபவானந்தன் 12 - 09 - 96 இல் அகால மரணமடைந்தார்.

அன்னார் சத்தியபவான், சயந்தன், சர்மிளா, சகுந்தன், சத்தியபானு ஆகியோரின் அன்புச் சகோதரர் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சரசாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:-
சத்தியபவான்
(சகோதரன்)

சரசாலை வடக்கு,
சரசாலை.

(42720)

## சிவகுரு கணபதிப்பிள்ளை

திருமதி.

## கணபதிப்பிள்ளை நாகம்மா

(இளைப்பாறிய ஆசிரியத் தம்பதிகள்
இந்து தமிழ் கலவன் பாடசாலை - கல்வியங்காடு)

கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலகரும், இளைப்பாறிய ஆசிரியருமாகிய ஸ்ரீமான். திரு. கணபதிப்பிள்ளையும், அவர்தம் பிரிய பத்தினியாகிய திருமதி. நாகம்மா கணபதிப்பிள்ளையும் 14-09-96 சனிக்கிழமை இறைவன் திருவடிக்கு இயற்கை எய்தினார்கள்.

அன்னார்கள் சிவகுருநாதபிள்ளை (லண்டன்), முத்துக்குமாரசாமி (மன்னார்), கமலாம்பிகை (ஆஸ்திரேலியா), சுந்தராம்பிகை, அமிர்தாம்பிகை ஆகியோரின் அன்புத்தந்தையும் தாயும், திரு. ஞானபூபதி (லண்டன்). யொலிற்றா (மன்னார்), திரு. சிவபாதசுந்தரம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமன், மாமியும், கல்யாணி, சுகன்யா, பரணி, ஜெனனி, டசானி. கண்ணா, டிசா ஆகியோரின் அன்புப்பேரனும் பேர்த்தியுமாவர்.

அமரர்களின் இறுதிக் கிரியைகள் இன்று (15-09-96) ஞாயிறு காலை 10 மணிக்கு அவர்களது இல்லத்தில் நடைபெற்று திருநெல்வேலி செம்பாட்டு மயானத்தில் பூதவுடல்கள் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை சகலரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. நித்தியானந்தன்
(மருமகன்)

கலைமணி வீதி,
கட்டப்பிராய்

(42731)

## வடக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களையும் வழங்குவதன் அவசியம் குறித்தும் இந்தச் சந்திப் பின்போது ஆராயப்பட்டது.

வடக்கிலிருந்து வவுனியா வந்து சேரும் மக்கள் கஷ்டங்கள் பற்றி ஆராய விசேட அதிகாரிகள் குழு ஒன்றை அங்கு அனுப்பிவைக்கவும் இந்தச் சந்திப்பின் போது இணக்கம் காணப்பட்டது. (இ-3)

## ஸ்ரீ மகாபோதிக்கு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யான ஆயுதங்களை அரிசி மூடைகளுக்குள் மறைத்து எடுத்துச் செல்லவும் —

தடைவழிச் சோதனை முகாம்களில் வைத்து இந்த வாகனத்தை சோதனை செய்ய முற்பட்டால் பாதுகாப்புப் பிரிவினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யவும் புலிகள் திட்டமிட்டிருந்தனர் என்று ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது. (இ-3)

## கொழும்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறவேண்டும் என்றும்— அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் கப்பல்களில் கொழும்பில் தங்கியிருப்போர் பயணம் செய்வதை அரசு தற்காலிகமாக நிறுத்தியுள்ளதையடுத்தே விமானத்தில் பயணம் செய்ய மக்கள் முண்டியடிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒரு வழிக்கட்டணமாக 3 ஆயிரம் ரூபாவும் இரு வழிக் கட்டணமாக 5 ஆயிரம் ரூபாவும் இதற்கு அறவிடப்படுவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டது தெரிந்ததே. (இ-3)

## பிரதி அமைச்சர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

வென்னப்புவவைச் சேர்ந்த சாளெட் திரேஸா என்பவரையும் அவரது வீட்டுப் பணிப்பெண்ணையும் கொலை செய்து அவர்களின் சடலங்களை எரித்ததாக இந்த வழக்கில் பிரதி அமைச்சரின் மனைவியான மேரி யூலியட் மொனிக்கா பெர்னாண்டோ மற்றும் அஜித் பிரியங்காரா உட்பட நால்வருக்கு சிலாபம் உயர் நீதிமன்றநீதியரசர் மகாநாம திலகரட்ண மரண தண்டனை விதித்திருந்தது தெரிந்ததே.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யவும்—

பிணை அனுமதி கோரியும் — எதிரிகள் தரப்புச் சட்டத்தரணி விடுத்த கோரிக்கையை அடுத்தே பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (இ-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 15-09-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org